# அரசு ஊழியர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாத இதழ்

ஆசிரியர்: ஆ.செல்வம்

மே - 2024

தனிப்பிரதி ரூ.20



# அமைப்பு தின நிகழ்வுகள்






























# அரசு ஊழியர்

**மாத இதழ்**

**2024 மே**

**மலர்:45** **இதழ்:05**

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக**

அச்சிட்டு வெளியிடுபவர்: **மு.அன்பரசு**

ஆசிரியர்: **ஆ.செல்வம்**

ஆசிரியர் குழு:
**மு.அன்பரசு, மு.பாஸ்கரன், தெ.வாசுகி, இரா. மங்களபாண்டியன், கோ.பழனியம்மாள், சி.பரமேஸ்வரி, சா.டானியல் ஜெயசிங், சா.கோதண்டபாணி, அ.குபேரன்**

வரைகலை: கார்ட்டுன்வாசி

இதழ் வடிவமைப்பு: ஆர்.காளத்தி 9677003178

இதழ் ஒருங்கிணைப்பு: ஜிஜி

**முகவரி:**
பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
மின்னஞ்சல் : arasuoozhiyar@gmail.com

**அச்சகம்:**
சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,
சென்னை - 600002

ஆண்டுச் சந்தா : ரூ.200
தனி இதழ் : ரூ.20


இந்த இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துக்கள் விமர்சனங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை மேற்கண்ட முகவரிக்கு, மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். தகுதியானவை பரிசீலிக்கப்பட்டு அரசு ஊழியர் இதழில் வெளியிடப்படும்.

இதழுக்கு அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள், கருத்துக்கள் விமர்சனங்களை பிரசுரிக்கவும், நிராகரிக்கவும், சுருக்கி வெளியிடவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.

# உள்ளே...


1. **நாற்காலிகள் மாறினாலும் நம் போராட்டங்கள் மாறப்போவதில்லை!** தலைவர் மடல் ................................4
2. **கோவில்**..........................................6
3. **போராடிப் பெற்ற உரிமைகளை பாதுகாத்திட அமைப்பு தினத்தில் சபதமேற்போம்!** பொதுச் செயலாளர் மேசையிலிருந்து..............................7
4. **ஜனநாயக விரோதமான ஒரே நாடு, ஒரே தேர்தல் முறை!** .........................9
5. **ஹோசிமின் நினைவலைகள்** ..............15
6. **தடைகளைத் தகர்த்து, சாகசங்களை நிகழ்த்தி, உரிமைகளை வென்றடுக்க அமைப்பு தினத்தில் ஒன்றுகூடி சூளுரைப்போம்!** .............................18
7. **ஜனநாயகம் மற்றும் ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பதே பாராளுமன்றத் தேர்தலின் மையப் பிரச்னையாக இருக்கும் !** .................21
8. **அமைப்பு தினத்தில்...** .......................23
9. **தேர்தல் பத்திர ஊழல் பாஜகவின் கிரிமினல் குற்றம்** ............................24
10. **பொய், புரட்டு, புள்ளிவிபரம்!** ..........28
11. **IFHRMS மூலம் 2024-25 நிதியாண்டிலிருந்து வருமான வரி பிடித்தம் மேற்கொள்ளும் நடைமுறையில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை உடனடியாக களையக் கோரி அரசு முதன்மைச் செயலாளர் நிதித்துறை அவர்களுக்கு நமது சங்கத்தின் சார்பில் வழங்கப்பட்ட முறையீடு** .................30
12. **கம்யூனிச சிந்தனை வளர்ச்சியைக் கண்டு அஞ்சி நடுங்கும் பிரதமர்**.......32

தலைவர் மடல்

# நாற்காலிகள் மாறினாலும் நம் போராட்டங்கள் மாறப்போவதில்லை!

மே மாதம் என்றாலே தொழிலாளர்கள் பற்றிய நினைவும், அக்கறையும் அரசியல்வாதிகளுக்கு வந்து உழைப்பாளி மக்களுக்கு வாழ்த்து சொல்கிற ஒரு சம்பிரதாய நிகழ்வாக தொழிலாளர் தினம் மாறிவிட்டது. உழைப்பாள மக்களுக்கு சாண் வயிற்றுக் கஞ்சிக்கும், ஒரு முழக் கந்தைக்கும், ஒடுங்க ஒரு இடத்திற்கும் உத்தரவாதம் செய்யாமல் உண்மையான தொழிலாளர் தினம் என்பது ஒரு சம்பிரதாய நிகழ்வே தவிர வேறில்லை. வரி மேல் வரி போட்டு நரிபோல் தொழிலாளர்களுக்கு நயவஞ்சம் செய்யும் ஆட்சிகளின் காட்சிகள் இனி மாறும் என்ற நம்பிக்கையில்லை. ஒரு வேளை அப்படி மாறினாலும் புதிதாக வரும் ஆட்சியும் முடிக்கப்பட்ட அத்தியாயத்தின் மறு பதிப்பாக உள்ளது, நாம் இங்கே நமக்கான நல்லதொரு அரசியல் வாதியை தேர்ந்தெடுக்க முடியாமல் அழுகிப்போன தக்காளியில் சுமாரான தக்காளியை தேர்ந்தெடுக்கும் துரதிருஷ்டவசத்தில் தள்ளப்பட்டிருக்கிறோம்.

தேர்தல் வாக்குறுதிகளிலிருந்து வாக்குசாவடிகள் வரையும் ஏமாற்று வேலைகளும் சூழ்ச்சிகளும் நிறைந்த களமாக அரசியல் மாறியுள்ளது. நான் ஓட்டு போட்டது உண்மைதான் யாருக்கு போட்டேன் என்பதும் நிதர்சனம்தான். ஆனால் அந்த ஓட்டு யாருக்கு போய் சேர்ந்தது என்பதில் பல சதியாட்டங்கள் நிகழ்த்தப்படுவதாக வரும் செய்திகள் ஆரோக்கியமான ஜனநாயகத்தை வளர்த்தெடுப்பதை இயலாததாக்கிவிடும். இத்தகையதோரு இழிவான நிலைக்கு நாடு சென்று கொண்டிருப்பது வருத்தப்பட வேண்டிய நிகழ்வாகும், 1990ல் காங்கிரஸ் ஆட்சி கதவைத்திறந்து நுழையவிட்ட தாராளமய திட்டங்கள்தான், பிரதமர் நரேந்திரமோடியின் தலைமையிலான பாஜக ஆட்சியில் உலகமய, தாராளமய, தனியார்மய கொள்கைகளாக மூர்க்கத்தனமாக அமலாக்கப்பட்டு வருகின்றன,

கொரோனா எனும் கொடிய வைரஸ் உலகம் முழுவதும் தாண்டவமாடிய வேளையில் மோடி அரசு, கொரோனாவை பயன்படுத்தி நிலக்கரி, கனிமம், இயற்கைவளம், விமான நிலையங்கள், விண்வெளி, பாதுகாப்பு, ரயில்வே, மருத்துவம் போன்றவற்றில் தனியார்மயத்தை புகுத்தும் தரங்கெட்ட செயல்களில் ஈடுபட்டது. பாஜக ஆளும் மாநிலங்களில் தொழிலாளர் நல சட்டங்களை நிறுத்திவைப்பது, முடக்கிவைப்பது போன்ற கீழ்த்தரமான செயலில் ஈடுபட்டு வருவதும், மறுபுறத்தில் தொழிலாளர் நலச்சட்டங்களை கார்ப்பரேட் முதலாளிகளுக்கு ஆதரவாக திருத்துவது, 8 மணி நேர வேலையை 12 மணிநேரமாக மாற்றுவது என தொழிலாளர் விரோத நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதுமாக பாஜக அரசு பெரும்பான்மை மக்கள் கூட்டத்தை மறந்துவிட்டு கார்ப்பரேட்டுகளுக்கு கம்பளம் விரிக்கும் சேவகனாக மாறியிருக்கிறது.

இந்த தாராளமய யுகத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு பெருமுதலாளிகள் கூட்டத்திற்கு சலுகைகள் வாரி வழங்கப்பட்டுள்ளன. அவர்களின் தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் தொழிற்சங்கம் அமைக்கும் உரிமை

மறுக்கப்பட்டு வருகிறது. தொழிற்சங்கம் அமைக்கப்பட்ட இடங்களில் அங்கீகாரம் மறுக்கப்படுகிறது. கொத்துக்கொத்தாக தொழிலாளர்கள் பழிவாங்கப்படுகின்றனர். தமிழகமும் இந்த கொடுமைகளில் முதல் வரிசையில் இருக்கிறது. புதிய தொழிற்சாலைகளில், குறிப்பாக பன்னாட்டு நிறுவனங்களில் கான்ட்ராக்ட், கேசுவல், பயிற்சியாளர் என்ற பெயரில் பெரும் உழைப்புக் கொள்ளை நடக்கிறது. எந்த சட்டமும் இங்கு நுழைவதில்லை. அரசு இயந்திரம் இவர்கள் முன்பு கூனிக் குறுகி நிற்கின்றது. இத்தனை ஆண்டுகளில் இந்தியாவில் தொழிலாளர் விரோதக் கொள்கைகளுக்காக ஒரு முதலாளி கூட தண்டிக்கப்பட்டதில்லை. அந்த அளவிற்கு சட்டத்தில் சல்லடையாக ஓட்டைகள். முறைசாரா தொழிலாளர்கள், சுயதொழில் செய்து பிழைப்போர், சிறு-குறுந்தொழிலில் பணியாற்றும் தொழிலாளர்கள் உடைமையாளர், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் என ஒவ்வொரு பிரிவினரும் சொல்லொண்ணா துயருக்கு ஆளாகியுள்ளனர். இவர்களுக்கு உருப்படியான சமூகப் பாதுகாப்பு சட்டத்தைக் கொண்டுவர மத்திய அரசு மறுக்கிறது.

திராவிட மாடல் அரசாங்கம் என்று சொல்லிக்கொள்ளும் தமிழ்நாட்டில் பெரிய தொழிற்சாலைகளில் பணி நிரந்தரம் இல்லை, மிகைநேர ஊதியம் இல்லை, பண்டிகை விடுமுறையில்லை, மாறும் பஞ்சப்படி இல்லை என்ற நிலைதான் உள்ளது. சீர்திருத்த தொழிற்சங்க தலைவர்கள் நிர்வாகத்தோடு கைகோர்த்து துரோக ஒப்பந்தங்களை போடுவதும். அது குறித்து பேரவைக் கூட்டத்தில் விவாதிக்ககூட வழிவகை செய்யாமல் பேரவைக் கூட்டத்தை கூட்டாமலே இருப்பதும். தொழிலாளர்களுக்கு ஒப்பந்தம்பற்றி எடுத்துரைப்பதை தவிர்ப்பதும் தான் நடந்தேறி வருகிறது, இவை எல்லாம் தொழிலாளர் மத்தியில் பெரும் போராட்ட எழுச்சியை உண்டாக்கி வருகிறது. அரசு ஊழியர்களின் நிலையும் அப்படித்தான் உள்ளது, ஏற்கெனவே உள்ள உரிமைகள் ஒவ்வொன்றாக பறிக்கப்பட்டு வருகின்றன. ஓய்வூதியம், சரண்டர் போன்றவை பறிக்கப்பட்டு போராட்ட களங்களில் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் விடப்பட்டுள்ளனர். நீதிமன்றங்களும் அரசாங்கத்திற்கு ஆதரவாக போராட்டம் செய்ய ஊழியர்களுக்கு உரிமை இல்லை என்ற நிலைப்பாடுகளை அவ்வப்போது எடுத்து வருகின்றன, காலிப்பணியிடங்கள் பல வருடங்களாக நிரப்பப் படாமல் மூன்று நான்கு ஊழியர்கள் செய்ய வேண்டிய வேலையை ஒரே ஊழியர் செய்ய வேண்டிய நிலை எழுந்துள்ளது. அடிப்படை வேலைகள் ஒப்பந்த முறைக்கு மாற்றப்படுகிறது. அவுட்சோர்சிங் முறையில் அரசுப்பணிகள் மாறி வருகின்றன. அரசுத்துறைகளில் நிரந்தப்பணி என்ற உத்தரவாதச் சூழல் குழிதோண்டி புதைக்கப்பட்டு வருகிறது. இதன் போக்கும் விளைவும் மக்களையும் சமூகத்தையும் பாதிக்கும் என்பதை அரசியல்வாதிகளும், அதிகார வர்க்கத்தினரும் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

தேர்தல் முடிவுகள் அரசு ஊழியர்கள் எதிர்பார்த்தபடியும் வரலாம் எதிர்பாராதபடியும் இருக்கலாம். ஆனால் எந்தக் கட்சி வென்றாலும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள். தொழிலாளர்கள். பாட்டாளிகள். விவசாயிகள் இவர்களின் கோரிக்கைகள் எளிதாக நிறைவேறப்போவதில்லை என்பது மட்டும் நிச்சயம். இந்த நிசர்னத்தை நாம் உணர்ந்து கொண்டு நம்முடைய இழந்தது உரிமைகளை மீளப் பெறுவதற்கும் விட்டுவிடாமல்

காப்பதற்குமான போராட்டங்களையும் போர்கருவிகளையும் முன்னெப்போதையும் விட கூர்மையாக உருவாக்கிக் கொண்டே இருப்போம், பெரிய பாறையை உடைக்கும் சம்மட்டிகளாக நாம் இருப்போம் பாறைகளை பலவீனப்படுத்த சம்மட்டியின் ஒவ்வொரு அடியும் முக்கியம் என்பதை உணர்ந்தவர்களாக இந்த இயக்கத்தை முன்னேற்றப்பாதையில் நகர்த்துவோம்!

## சூடா ஒரு கோப்பை சூப்

# அச்சம்

கடலுக்குள் நுழைவதற்கு முன்
ஒரு நதி பயத்தில் நடுங்குகிறது.

மலைகளின் சிகரங்களிலிருந்து
காடுகளை கிராமங்களை
கடந்துவந்த நீண்ட நெடியபாதையை
அது திரும்பிப் பார்க்கிறது.

கடலுக்குள் நுழைவதென்றால்
என்றென்றைக்கும் காணாமல்
போவதென்று அர்த்தம்.

வேறு வழியில்லை அந்த நதி
திரும்பிச்செல்ல முடியாது
நதிக்கு மட்டுமில்லை
நமக்கும் அப்படித்தான்
வாழ்வில் திரும்பிச் செல்வது
என்பது சாத்தியமில்லை.

சமுத்திரத்தில் நுழைவதெனும் முடிவை
நதி துணிந்து எடுத்ததுத்தான்
ஆக வேண்டும்

அப்போதுதான் அச்சம் அகலும்
அப்போதுதான் புரியும்
சமுத்திரத்தில் நுழைவதென்பது
மறைந்து போவதல்ல
சமுத்திரமாய் ஆவதென்று.

**-கலீல் ஜிப்ரான்**

கவிதை

# கோவில்

“இந்த கோவிலில் கடவுள் இல்லை!”
என்றார் அந்த முனிவர்! அரசர் ஆத்திரமடைந்தார்
“என்ன? கடவுள் இல்லையா?
ஓ முனிவரே! ஒளிரும் தங்கச் சிலை;
அந்த கிரீடம், விலை உயர்ந்த வைர வைடூரிய
கற்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது!
இருப்பினும் அதனை வெற்றிடம் என்கிறீர்களே?!”

“இல்லை மன்னா அது வெற்றிடமில்லைதான்;
அது அரச பெருமையாலும் பெருமிதத்தாலும்
நிறைந்து கிடக்கிறது மன்னா!
நீ உன்னையே பெருமைபடுத்தி கொண்டிருக்கிறாய்;
கடவுளை அல்ல.

“வானத்தையே முத்தமிட்டுக் கொண்டிருக்குமிந்த
மாபெரும் கோபுரத்தின்மீது 20 லட்சம் தங்ககாசுகள்
பொழியப்பட்டிருக்கின்றன. இவையத்தனையையும்
தேவையான எல்லா சாத்திர சம்பிராதயங்கள்படி
கடவுளுக்கு அர்ப்பணித்துள்ளேன்!
இருப்பினும் இந்த மாபெரும் கோவிலில்
கடவுள் இல்லை என்கிறாயே?!”
உறுமினார் மன்னர்!

முனிவர் அமைதியாக பதிலளித்தார்
“ஆம் மன்னா உமது 20 லட்சம் குடிகள் வறட்சியால்
உண்ண உணவின்றி உதவிக்காக உம்மை
நாடி வந்து விரட்டப்பட்ட அந்த வருடம் தான்
அவர்கள் காட்டிலும், மேட்டிலும், குகைகளிலும்,
சாலையோர சகதியிலும் தஞ்சம் அடைந்தனர்!
அந்த வருடத்தில்தான் நீ 20 லட்சம் தங்கக்
காசுகளைப் பொழிந்து இந்த மாபெரும்
கோவிலைக் கட்டினாய்!
அந்த நாள்தான் கடவுள் அறிவித்தார்:
"தம் சொந்த குடிமக்களுக்கு புகலிடம் தராத
ஒருவனாலா எனக்கு இல்லத்தை தர முடியும்?” என்று
உன்னுடைய கோவிலை விட்டு வெளியேறினார்!
சாலையோர மக்களோடு மரத்தின் கீழே
தஞ்சம் அடைந்தார்"

ஆத்திரமடந்த அரசன் சீறினான்
“ஓ! அற்பப் பதரே! இந்த நொடியே
என் நாட்டைவிட்டு வெளியேறு”

மீண்டும் முனிவர் பதட்டப்படாமல் பதில் அளித்தார்
“நீ இங்கே இருந்த புனிதத்தை எங்கே
வெளியேற்றினாயோ அங்கேயே
அன்புடன் இந்த பக்தனையும் அனுப்பிவிடு”

**- ரவீந்திரநாத் தாகூர்**

(120 ஆண்டுகளுக்கு முன்பு எழுதியது)

# போராடிப் பெற்ற உரிமைகளை பாதுகாத்திட அமைப்பு தினத்தில் சபதமேற்போம்!

*பெற்ற உரிமை ஒவ்வொன்றின் பின்னும்*
*உழைத்திட்ட கரங்கள் உண்டு*
*வடித்திட்ட வியர்வையுண்டு*
*சிந்திய ரத்தம் உண்டு அவற்றை*
*விட்டுவிடாமல் கட்டிக்காக்க வேண்டிய*
*கடமையும் உறுதியும் நமக்குண்டு*
*அதற்கான சபதமேற்போம் இன்று !*

தமிழ்நாட்டில் அரசு ஊழியர்கள் 1984க்கு முன் ஊதியத்திலும, உரிமைகளிலும் இந்தியாவில் 17வது இடத்தில் இருந்தனர். தாங்கள் என்ன நிலையில் இருக்கிறோம் என்பதை அறியதவர்களாக ஒரு உணர்ச்சியற்ற நிலையில் இருந்தனர். அந்த கால கட்டத்தில் அரசு ஊழியர், ஆசிரியர்களின் ஒட்டு மொத்த எண்ணிக்கையை கூறி அனைவருக்கும் நானே தலைவர் என்று சொல்லி தான் சொந்த நலன்களை பாதுகாத்துக் கொள்வதற்கான சிறந்த உத்தியாக பயன்படுத்திக் கொண்டிருந்து சங்கத் தலைமை 1980களில் நடந்த கருவூலத்துறை, மருத்துவத்துறை மற்றும் பல்வேறு துறைகளில் சங்கஙகள் நடத்திய போராட்டத்தில் கிடைத்த வெற்றிகள் அரசு ஊழியர்கள் மத்தியில் எழுச்சியை ஊட்டியது. தொடர்ந்து நடந்த போராட்டங்களில் கருவூல பபோராட்டம், உதவி வேளாண்மை அலுவலர் போராட்டம் என்று அத்தனை போராட்டங்களையும் முறியடிக்க அன்றைக்கு இருந்த தமிழக அரசு அடக்கு முறைகளாலும் அளவு கடந்த பொய் வழக்குகளாலும்(2003ஐ போல)சந்தித்தது, பாதுகாப்பு கொடுக்க வேண்டிய அன்றைய சங்கத் தலைமை வேடிக்கை பார்த்து நின்றது. வாய்ச் சொற்களால் ஆட்சியாளரை வணங்கியே இழப்புகளை மீட்டிடுவோம் என்று சபதம் செய்தது. சங்கததின் உள்ளே நடந்த மிக கடுமையான விவாதங்களுக்கும், வார்த்தை மோதல்களுக்கும் சங்கத் தலைமை பதில் இல்லை என்பது மட்டுமல்ல விவாதத்தில் ஈடுபட்ட மாவட்டங்கள் கலைக்கப்பட்டன. சங்கத் தலைமையின் ஊசாட்டம் மற்றும் துணிச்சலற்ற அணுகுமுறை ஆகியவற்றை கண்ட சாதாரண அரசு ஊழியர்கள் புதிய சங்கம் துவங்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி இருந்த நிலையில் போராட்ட குணம் உள்ள தோழர்களுக்கு சங்கம் தேவைப்பட்டது.

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் ஊழியர்கள் உரிமைகளை பெற்று தரக்கூடிய உற்ற தோழனாக தோன்றியதுதான் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் 6.5.1984ல் சங்கம் வளர்த்த மதுரையில், நீதி கேட்ட கூடல் மாநகரில் பல்லாயிரக்கணக்கான ஊழியர்களின் கரவொலிகளுக்கு நடுவே தொடங்கப்பட்டதுதான் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம். அதன் பிறகு நனைடபெற்ற அனைத்து இயக்கங்களும் வீறு நடைபோட்டு வெற்றியை நோக்கிள நடக்கத் தொடங்கின. 1985 ஆசிரியர்கள் சிறை செல்லும் போராட்டம் நடத்தினர். தீபாவளி அன்று கூட வெளியில் விட மறுத்த நிலையில் கருப்பு தீபாவளி என்று அழைத்து சிறைச்சாலையில் தீபாவளியை கொண்டாடினார்கள்.

ஆசிரியர் போராட்டத்தை அனைத்து வட்டங்களிலும் அரசு ஊழியர் சங்கமே முன்னின்று நடத்தியது. முதன் முதலில் போனஸ் ஏற்கப்பட்டது. இந்த போராட்டத்தில் தான் உடைக்க முடியாத ஒற்றுமை ஏற்பட்டு அரசு ஊழியர் ஆசிரியர் மத்தியில் நம்பிகை வெளிச்சம் தோன்றியது.

10.2.88 அன்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் நடத்திய ஒரு நாள் வேலை நிறுத்தம் அசையாத பகுதிகளை அசைத்தது தொடர்ச்சியாக நடத்திய முப்பத்தியோரு நாள் வேலை நிறுத்தப் போராட்டம் மாபெரும் வெற்றியாக மாறியது. ஒற்றுமை என்ற ஒற்றை வார்த்தையில் போராட்டம் நிலை நிறுத்தப்பட்டது. 42 ஆண்டுகள் கனவில் இருந்த மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் நிஜமானது. இந்த போராட்டம் வெற்றி பெறும் வாருங்கள் என்ற அழைத்தபோது வர மறுத்த பல பகுதிகள் போராட்டம் வெற்றி பெற்ற பின்னர் அழைக்கும் முன்பே வந்து சங்கப் போராட்டத்தின் திசை வழியை மட்டும் தான் மாற்றும் என பலர் நினைத்தனர். ஆனால் ஒவ்வொருவர் வாழ்க்கையின் திசை வழியையே மாற்றும் என்பதை அனுபவத்தால் உணர்ந்தனர். அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் 1947 முதல் 1988 வரையிலான ஊதிய தேக்க நிலையை உடைத்தது மட்டுமல்ல அரசில் பல்வேறு அடக்குமுறைக் கருவிகளை உறை நிலைக்குக் கொண்டுச் சென்று சேர்த்தது மாபெரும் சாதனை படைத்த போராட்டம் இன்றும் நினைவில் நிற்கிறது.

தமிழகத்தின் மாபெரும் சமூக சக்தியாக ஒரு தொழிற் சங்க சக்தியாக உருவெடுத்து தமிழக அரசு ஊழியர்களின் பல சலுகைகளை பெற்று நடுத்தர வர்க்க அமைப்புகளிடையே ஒரு உயர்வான நிலையில் உள்ளது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம். இத்தகைய போராட்டங்கள் ஆசிரியர்களுக்கு மறு சிந்தனையை ஏற்படுத்தியது. ஒரு புதிய முற்போக்கு எண்ணம் கொண்ட போராட்ட இயக்க தலைவர்களாக ஒவ்வொருவரும் மாற்றம் அடைந்திருந்தனர். இந்தியாவில் இதுவரை நடைபெறாத போராட்டமாக 2003ன் போராட்டம் மிகப் பெரிய எழுச்சியை ஏற்படுத்திய போராட்டம், 2016 தனித்து நின்று நடத்திய போராட்டம், 2017ல் தலைமைச் செயலாளரை நீதிமன்றத்தில் ஏற்றிய போராட்டம், 2019 போராட்டம் என்று போராட்டங்களின் வரலாறே தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க வரலாறு என்றாகியது. இன்றைக்குக்கும் எல்லாத் துறை சங்க அமைப்புகளையும் முன்னோக்கி செலுத்தும் அமைப்பாக அரசு ஊழியர் சங்கம் விளங்கி வருகின்றன.

எனவே இந்த 40 ஆண்டு முடிந்து 41ஆம் ஆண்டில் நமது ஸ்தாபனத்தின் கட்டமைப்பை வலுப்படுத்துகின்ற வகையில் உறுப்பினர் சந்தா சேர்ப்பில் கடந்த காலங்களைவிட ஒரு முறிப்பை ஏற்படுத்தி இலக்கை எட்டிடவும், வட்டக்கிளைகளை வலுப்படுத்தி முன்னணி ஊழியர்களுக்கு பயிற்சி அளித்து சங்க பணிகளில் அதிக ஊழியர்களை பங்கேற்க வைத்திட இந்த அமைப்பு தினத்தில் உறுதி ஏற்போம். அதேபோல் நமது வாழ்வாதார கோரிக்கையான புதிய பென்சன் ரத்து, சரண்டர், சிறப்பு காலமுறை ஊதியம் பெற்றிடவும், காலிப்பணியிடங்கள் பூர்த்தி செய்தல் உள்ளிட்ட கோரிக்கைகளுக்கான போராட்டத்தை திட்டமிடவும், நமது இந்திய தேசத்தை, இறையாண்மையை பாதுகாக்கவும், மக்கள் விரோத, தொழிலாளர் விரோத கொள்கைகளை கடைபிடிக்கும் ஒன்றிய அரசின் சட்டங்களுக்கு எதிராக கருத்தாலும், கரத்தாலும் உழைக்கும் மக்களுடன் ஒன்று சேர்ந்து தேசத்தை பாதுகாத்திடவும், போராடி பெற்ற உரிமைகளை பாதுகாத்திடவும் 41வது அமைப்பு தினத்தில் உறுதியேற்போம்!

●

# ஜனநாயக விரோதமான ஒரே நாடு, ஒரே தேர்தல் முறை!

இரா.மங்களபாண்டியன்

நாடாளுமன்ற மக்களவைக்கும், மாநில சட்டமன்றப் பேரவைகளுக்கும் ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடத்த வேண்டும் என்பது, அடிப்படையில் ஜனநாயக விரோத மானது: மற்றும் அரசமைப்புச்சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற ஜனநாயக முறையின் ஆணி வேரையேத் தகர்த்திடும் செயலுமாகும்.

#### அரசமைப்புச் சட்டம் சொல்வது என்ன?

மக்களவைக்கும், மாநில சட்டமன்ற பேரவைகளுக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடத்துவது என்பது ஒன்றிய அரசாங்கமும் முறையே நாடாளுமன்றம் / சட்டமன்றங்களும் பதில் சொல்லவேண்டும் என்கிற அரசமைப்புச்சட்ட விதிமுறையை சிதைத்திடும். அரசமைப்புச் சட்டத்தின் 75(3) ஆவது பிரிவு, நாடாளுமன்றம்/ சட்டமன்றத்திற்குப் பதில் சொல்வதற்கு அமைச்சர்கள் கூட்டாக பொறுப்பேற்க வேண்டும் என்கிறது. அதே போன்றே 164(1) ஆவது பிரிவு, மாநிலங்களில் ஆளும் அமைச்சர்கள் மாநில சட்டமன்றங்களுக்குப் பதில் கூற கூட்டாகப் பொறுப்பேற்க வேண்டும் என்று வரையறுக்கிறது. அரசமைப்புச் சட்டத்தின்படி, ஓர் அரசாங்கம், நாடாளுமன்றம் /சட்டமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு, நிறைவேற்றப்பட்டு நாடாளுமன்றம்/சட்டமன்றத்தின் நம்பிக்கையை இழந்தாலோ அல்லது நிதிச் சட்டமுன்வடிவு தோற்கடிக்கப்பட்டாலோ, அந்த அரசாங்கம் ராஜினாமா செய்யக் கடமைப்பட்டதாகும். மாற்று அரசாங்கம் அமைக்கப்பட முடியவில்லையெனில், மக்களவை/சட்டமன்றம் கலைக்கப்பட்டு, இடைத்தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

#### பதவிக் காலத்தை நீட்டித்தால், சட்ட விரோதம்

மக்களவைக்கோ அல்லது மாநில சட்டமன்றங்களுக்கோ பதவிக்காலம் எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. அரசமைப்புச் சட்டத்தின் 83(2) மற்றும் 172(1) ஆகியவை மக்களவை மற்றும் மாநில சட்டமன்றப் பேரவையின் ஆட்சி காலம் அவை ஏதேனும் காரணங்களுக்காக முன்னதாகவே கலைக்கப்படாமல் இருந்தால், ஐந்தாண்டுகளாக இருக்கும் எனக் குறிப்பிட்டிருக்கின்றன.

மக்களவை அல்லது மாநில சட்டப் பேரவைகளின் ஆட்சி காலத்தை நீட்டிப்பதற்கு ஏதேனும் முயற்சி மேற்கொள்ளப்பட்டால் அது அரசமைப்புச்சட்டதிற்கு எதிரானது மட்டுமல்ல, ஜனநாயக விரோதமானது மாகும். மக்கள் பிரதிநிதிகள் மூலமாக மக்களின் விருப்பமே எப்போதும் மேலோங்கி இருக்க வேண்டும்.

#### குடியரசுத் தலைவர் ஆட்சிக்கான முயற்சி

ஒரே சமயத்தில் தேர்தல்களை நடத்த வேண்டும் என்ற நோக்குடன் அரசமைப்புச் சட்டத்தை திருத்துவதற்காகப் பல்வேறு பரிந்துறைகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. நிதி ஆயோக் இது தொடர்பாக அளித்திருக்கும் பரிந்துரை என்னவெனில், மக்களவையைக் கலைப்பதைத் தவிர்க்க முடியாத பட்சத்தில், மீதம் உள்ள

மக்களவையில் ஆயுள் காலம் குறைவானதாக இருந்தால், அந்த காலத்திற்கு, ஆட்சி அதிகாரத்தை மேற்கொள்வதற்கு குடியரசுத் தலைவர் ஆட்சியை நாடு முழுதும் அமல்படுத்துவதற்கு ஏதுவாக ஒரு ஷரத்து உருவாக்கப்படலாம் என்பதாகும் அடுத்து தேர்தல் நடைபெற்று புதிய ஆட்சி அமையும் வரை அவரால் நியமனம் செய்யப்படும் அமைச்சரவையின் மூலம் நாட்டில் நிர்வாகம் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும் என்பதாகும். இத்தகு அடாவடித்தனமான முன்மொழிவு, குடியரசுத் தலைவரை ஆட்சி புரிபவராக மாற்றுகிறது. இது கொல்லைப்புற வழியாக, குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டு வரும் செயலாகும்.

**சட்டமன்ற உறுப்பினரைத் தேர்வு செய்யும் உரிமை மீதான தாக்குதல்**

இது தொடர்பாக மற்றொரு பரிந்துரை என்னவெனில், அவை கலைக்கப்படும் நேரத்தில், எஞ்சியிருக்கும் காலம் நீண்டதாக இருப்பின், புதிய தேர்தல்கள் நடத்தப்பட்டு, மீதமுள்ள காலத்திற்கு மட்டுமே அவை இருந்திடும். அதாவது, அதன் ஆட்சிக் காலத்தில் இரண்டு ஆண்டுகளுக்குப்பிறகு, அவை கலைக்கப்படுகிறது. என்றால், அடுத்த தேர்தல், மூன்று ஆண்டு காலத்திற்கு மட்டுமே செல்லுபடியாகும். எனவே உண்மையில் மக்களவை தேர்தல்கள் அடிக்கடி நடக்கும். இது நோக்கத்தை தோற்கடிக்கும். அதற்காகவே ஒரே நேரத்தில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்று நியாயப்படுத்தப் பட்டிருக்கிறது.

ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடத்தப்படுவதற்கான முயற்சிகளின் காரணமாக ஏற்படக்கூடிய மற்றொரு பாதிப்பு கூட்டாட்சித் தத்துவத்தின் மீதான தாக்குதலாகும். 2015 நாடாளுமன்ற நிலைக் குழுவின் 79 ஆவது அறிக்கை மற்றும் நிதிஆயோக் அமைப்பின் ஆவணம் ஒன்று, அளித்துள்ள முன்மொழிவு என்னவெனில், சில சட்டமன்றங்களின் ஆயுளை நீடிப்பது, அல்லது சிலவற்றின் ஆயுளை வெட்டிக்குறைப்பது ஆகும். இவ்வாறே ஒரு சட்டமன்றத்தின் ஆயுளை நீட்டிப்பதோ, அல்லது குறைப்பதோ, இவ்விரண்டுமே மாநிலங்களின் உரிமைகள் மீதான தாக்குதலாகும். அம்மாநில மக்கள் தங்கள் சட்டமன்ற உறுப்பினர்களைத் தேர்வு செய்திடும் உரிமைகள் மீதான தாக்குதலுமாகும். மாநில சட்டமன்றங்களைப் பொறுத்தவரை முன் வைக்கப்பட்டிருக்கும் மற்றுமொரு பரிந்துரை என்னவெனில், ஒரு மாநில சட்டமன்றத்தின் ஆட்சிக் காலம் முடிவடைவதற்கு முன்பே அது கலைக்கப்படுமாயின், எஞ்சிய காலத்திற்கு அம்மாநிலத்தின் ஆட்சியை அம்மாநில ஆளுநரைக் கொண்டே நடத்திட வேண்டும் என்பதாகும் இதன்பொருள், இது ஒன்றிய அரசாங்கத்தின் ஆட்சியைக் கொண்டு வருவதே தவிர வேறல்ல.

**உரிமைகளைப் பறிக்கும் முன்மொழிவுகள்**

நாடாளுமன்றம்/சட்டமன்றங்களின் பொறுப்பைத் தட்டிக்கழிக்கும் விதத்திலும், ஆட்சியாளர்களின் பதவிக்காலத்தை நீட்டிக்கும் விதத்திலும், எண்ணற்ற முன் மொழிவுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்திய சட்ட ஆணையத்தின் வரைவு பணித்தாள் உட்பட முன்மொழியப்பட்டுள்ள மற்றொரு ஆவணம், அவையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படும் போது, அவைக்குப் புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தீர்மானமும் அத்துடன் இணைக்கப்பட வேண்டும் என்பதுமாகும். இதன் பொருள், உறுப்பினர்கள் புதிய அரசாங்கத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான நிபந்தனையுடன் ஆட்சியிலிருப்பவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டும் என்பதாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மக்களவை

உறுப்பினர்களின் எந்தவொரு அரசாங்கத்திற்கும் வாக்களிப்பதற்கான உரிமையை கட்டுப்படுத்த முடியாது, மேலும் அவையில் நிலையான பெரும்பான்மையைக் கொண்ட ஆளும் கட்சிக்கு அவையைக் கலைத்து முன்கூட்டியே தேர்தலை நடத்த பரிந்துரைக்கும் உரிமையையும் குறைக்க முடியாது.

#### மாநில அரசுகளைக் கலைத்ததுதான் பிரச்சனை

மக்களவைத் தேர்தலுடன் இணைத்து, மாநில சட்டமன்றங்களுக்கும் தேர்தலை நடத்துவதற்கான அனைத்து முன்மொழிவுகளும், கூட்டாட்சித் தத்துவத்தையும், மாநிலங்களின் உரிமைகளையும் மதிக்காத போக்கையே வெளிப்படுத்துகின்றன. முதலாவதாக, ஒன்றிய அரசாங்கம், அரசமைப்புச் சட்டத்தின் 356 ஆவது பிரிவைத் தான்தோன்றித்தனமாக துஷ்பிரயோகம் செய்து, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பல மாநில அரசாங்கங்களைக் கலைத்ததன் விளைவாகவே, பின்னர் மக்களவைக்கும் பல மாநில சட்டமன்றங்களுக்கும் ஒரே சமயத்தில் தேர்தல்களை நடத்த முடியாத நிலை ஏற்பட்டது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. 1959 இல் கேரளாவில் அமைக்கப்பட்ட கம்யூனிஸ்ட் அரசாங்கம் கலைக்கப்பட்டதிலிருந்து இந்த செயல்முறை தொடங்கியது.

ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடத்துவது என்ற பெயரில் முன்வைக்கப்படும் அனைத்து முன்மொழிவுகளும், ஆளுநரின் பங்களிப்பையும், அதன் முலம் ஒன்றிய அரசாங்கத்தின் தலையீட்டையும் அதிகரித்திடும். இந்தியா எண்ணற்ற வேற்றுமைகளைக் கொண்ட ஒரு பரந்த நாடாகும். எனவே கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படையிலான அரசில் ஜனநாயக அமைப்பே இங்கே நிலைத்து நிற்க முடியும். மாநிலங்களுக்குப் பல்வேறு கால கட்டங்களில் தேர்தல்கள் நடத்தப்படுவது கூட்டாச்சி அமைப்பு முறையின் ஓர் அம்சமாகும்.

எனவே, நாடாளுமன்றத்திற்கும், மாநில சட்டமன்றங்களுக்கும் ஒரே சமயத்தில் தேர்தல்களை நடத்த வேண்டும் என்பதற்காக, ஏதேனும் செய்கை முயற்சி மேற்கொள்ளப்படுமானால் அதனை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, முற்றிலுமாக எதிர்த்திடும். ஒரே சமயத்தில் தேர்தல்கள் நடத்தப்படுவதென்பது, தற்போது அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் இருந்து வரும் நாடாளுமன்ற ஜனநாயகத்தை காலில் போட்டு மிதித்திடும் ஒன்றாகவே அமைந்திடும்.

## கூட்டாட்சிக் கட்டமைப்பை தகர்க்கும் உச்சநீதிமன்றத் தீர்ப்பு

ஜம்மு மற்றும் மற்றும் காஷ்மீருக்கு அர அரசியலமைப்பின் 370-ஆவது பிரிவின் கீழான சிறப்பு அந்தஸ்தை ஒன்றிய அரசு ரத்து செய்தது செல்லும் என்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான 5 நீதிபதிகள் அடங்கிய சாசன அமர்வு தீர்ப்பளித்துள்ளது.

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்திற்கென்று தனியாக உள்ள இறையாணமை இல்லை என்றும் இந்திய அரசியலமைப்பை ஜம்மு - காஷ்மீரில் செயல்படுத்த மாநில அரசின் ஒப்புதல் தேவையில்லை என்றும் கூறியிருக்கும் அரசியல் சாசன அமர்வானது சட்டப்பிரிவு 370 என்பது ஒரு தற்காலிக விதிதான் என்று வழங்கியுள்ளது.

ஜம்மு - காஷ்மீர் யூனியன் பிரதேசத்திற்கு விரைவில் மாநில அந்தஸ்து வழங்கப்படும் என்று சொலிசிட்டர் ஜெனரல் உறுதி அளித்துள்ளதால், ஜம்மு-காஷ்மிர் யூனியன் பிரதேசமாக மறு சீரமைக்கப்பட்டதன் செல்லுபடி தன்மை குறித்து தீர்ப்பளிக்க

வேண்டியதில்லை என்று கூறியுள்ள உச்சநீதிமன்றம், லடாக்-கை யூனியன் பிரதேசமாக மாற்றியது செல்லும் என்று குறிப்பிட்டுள்ளது. மேலும் செப்டம்பர் 30 2024-க்குள் ஜம்மு-காஷ்மீர் சட்டப்பேரவைக்கு தேர்தல் நடத்த நடவடிக்கை எடுக்குமாறு, இந்திய தேர்தல் ஆணையத்துக்கும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

2019 டிசம்பர் 5 அன்று ஜம்மு-காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் அரசியலமைப்பு சட்டப்பிரிவு 370 மற்றும் 35ஏ ஆகியவற்றை ரத்து செய்தது மத்திய அரசு. இது ஜம்மு-காஷ்மீர் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயல் என்றும், மேலும் மாநில அந்தஸ்தைப் பறித்து, ஜம்மு-காஷ்மீரை இரண்டு யூனியன் பிரதேசங்களாக பிரித்ததை ஏற்க முடியாது என்றும் உச்சநீதிமன்றத்தில் அரசியல் கட்சிகள், தனிநபர்கள் சார்பில் 23 ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த வழக்கு மீதான விசாரணையிலேயே உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு மேற்கண்ட தீர்ப்பை வழங்கியுள்ளது.

ஒரு மாநிலம் குடியரசுத் தலைவர் ஆட்சியின் கீழ் இருக்கும் போது நாடாளுமன்றம் எந்தச் செயலையும்-சட்டமியற்றுவதையும், மாற்ற முடியாத விளைவுகளைக் கொண்ட எந்தச் செயலையும்-செய்ய முடியும் என்று கூறியிருப்பது கூட்டாட்சிக் கொள்கை மீதான மிகமிகக் கடுமையான தாக்குதலாகும். நீதிமன்றம் குறிப்பிட்டுள்ள இந்த ஆபத்தான நியாயபடுத்தல் அரசியல் அமைப்பின் அடித்தளத்தையே ஆட்டம் காணச் செய்வதாகும். மாநிலங்களின் உரிமைகள் மீது கடும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசாங்கம் இல்லாத நிலையில் பல விநோதமான சரி செய்ய முடியாத செயல்களையும் அது அனுமதிக்கிறது. உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு, அரசாங்கத்தின் நிலைப்பாட்டை ஆமோதித்து மனுதாரர்களின் வாதங்களை நிராகரித்துள்ளது. அந்த மாநிலத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட எந்த ஒரு பிரதிநிதியையும் ஈடுபடுத்தாமல் அதற்கான வாய்ப்பையும் தராமல் சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்வதற்கு ஏற்றவாறு குடியரசுத் தலைவர் ஆட்சியைத் திணித்து ஒன்றிய அரசு மோசமான முறையில் செயல்பட்ட பின்னணியில் தற்போதைய தீர்ப்பு வெளிவந்துள்ளது.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் சிறப்பு அந்தஸ்தை நீக்க வேண்டும் என்பது ஆளும் ஒன்றிய அரசின் நீண்ட கால லட்சியம். இதனை நிறைவேற்ற அது ஒரு சிக்கலான செயல்முறையை மேற்கொண்டது. இரண்டு யூனியன் பிரதேசமாக பிரித்து அம்மாநிலம் தரமிறக்கப்பட்டது. 05.08.2019 அன்று பிறப்பிக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்ட ஆணை ஒன்றின் மூலம் இதைச் செய்தது.

ஆகஸ்ட் 5 அன்று பிறப்பிக்கப்பட்ட அந்த ஆணையில் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கான அரசியலமைப்புச் சட்டத்தையே முழுமையாக மாற்றும் விதத்தில் சில வரையறைகளை வகுத்திருந்தது, அதன்படி மாநில சட்டமன்றமே, மாநிலத்திற்கான சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்வதற்கான பரிந்துரையைச் செய்யலாம் என்று மாற்றியிருந்தது, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 370(3) இன் படி, ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கான சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்யும் அதிகாரம் அரசியல் நிர்ணய சபைக்குத்தான் உண்டு. ஆனால் தற்போது அரசியல் நிர்ணய சபை என ஒன்று இல்லை. எனவே அரசியல் நிர்ணய சபைக்கான அதிகாரத்தை மாநில சட்டமன்றமே நிறைவேற்றலாம் என ஆகஸ்ட் 5 ஆணையில் ஒன்றிய அரசு மாற்றம் செய்தது. எனினும் ஒன்றிய அரசின் ஆகஸ்ட் 5 ஆணையின் பகுதிகள் அரசியல்

சட்ட விரோதமானவை என்று நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. அரசியல் சட்டப்பிரிவு 370இல் திருத்தம் செய்வது அந்த பிரிவின் விதிகளின்படியே அனுமதிக்க முடியாதது என்றும் நீதிமன்றம் தனது தீர்ப்பில் ஒப்புக் கொண்டிருக்கிறது. ஆனால் அதே வேளையில் ஒரு விநோதமான திருப்பமாக 2019 ஆகஸ்ட் 6 அன்று ஒன்றிய அரசு வெளியிட்ட அறிவிக்கையில், அரசியல் சட்டப் பிரிவு 370 செல்லத்தக்கது என்றும் அதே நேரத்தில் எந்தவிதமான பரிந்துரையும் இல்லாமல் இதை செல்லத்தக்கதாக இல்லாமல் செய்வதற்கு குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உள்ளது என்றும் குறிப்பிட்டிருந்தது. எந்த விதமான பரிந்துரையும் இல்லாமல் மாநிலத்தின் சிறப்பு அந்தஸ்தை குடியரசுத் தலைவர் நீக்க முடியும் என்றும் குறிப்பிட்டிருந்தது.

1957இல் அரசியல் நிர்ணய சபை கலைக்கப்பட்ட பிறகு, இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஜம்மு- காஷ்மீர் மாநிலத்தில் படிப்படியாக அமல்படுத்தப்பட்டு வருகிறது என்றும், சிறப்பு அந்தஸ்து நீக்கமானது அத்தகைய ஒருங்கிணைந்த செயல்முறைகளின் உச்சக்கட்டமே தவிர வேறொன்றுமில்லை என்றும் நீதிமன்றம் நியாயப்படுத்தியுள்ளது. இந்த வாதத்தை ஏற்றுக் கொள்வதாகவே வைத்துக் கொண்டாலும் அரசியல் நிர்ணய சபை இன்று இல்லாத நிலையில் இந்தியாவின் இறையாண்மைக்கு ஜம்மு-காஷ்மீர் இணங்கி வந்திருந்த நிலையிலும் கூட எஞ்சியிருக்கும் தன்னாட்சிஅ ம்சங்களை குழிதோண்டி புதைக்க விரும்பும் ஒன்றிய அரசாங்கத்தின் நோக்கத்திற்கு இருந்த சிறிதளவான தடையும் இன்று அகற்றப்பட்டுவிட்டது. இது கூட்டாட்சி மற்றும் ஜனநாயகத்தின் அனைத்து நியதிகளுக்கும் எதிரானது. ஜம்மு-காஷ்மீர் எந்தவித தனித்த இறையாண்மையும் கொண்டிருக்கவில்லை என்பதில் சந்தேகமில்லை ஆனால் தனி அரசியலமைப்பு, எஞ்சிய சட்ட அதிகாரங்கள், மாநிலம் குறித்த பிரச்சனைகளில் நாடாளுமன்றம் சட்டம் இயற்ற வேண்டுமானால் அதற்கு தேவைப்படும் சட்டமன்றத்தின் சம்மதம் இவைகளை ஜம்மு-காஷ்மீருக்கு வழங்கும் சட்டப்பிரிவு 370 ஒரு சமரச்சீரற்ற கூட்டாட்சியை பிரதிநிதித்துவம் செய்கிறது என நீதிமன்றம் கூறியுள்ளது.

உண்மையில் மேற்கண்ட அதிகாரங்கள் மட்டும் அம்மாநிலத்திற்கு எவ்விதமான தனித்த இறையாண்மையையும் அளிக்காது. ஆனால் அம்மாநிலத்திற்கு நிறைவேற்ற வேண்டிய வரலாற்றுக் கடமைகள் மற்றும் அரசியல் அமைப்பை உருவாக்கிய தலைவர்களால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் ஆளும் கட்சியின் விருப்பப்படி காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளதை எப்படி நியாயப்படுத்த முடியும் என்பது புரியவில்லை. காஷ்மீர் தலைவர்களுக்கும் ஒன்றிய அரசுக்கும் இடையேயான நிலைப்பாடு, உரையாடல், அது இந்தியாவுடன் இணைந்த சூழல் மற்றும் நிபந்தனைகள், முற்போக்குத்தன்மை நிறைந்த அரசியல் அமைப்பு வழிமுறைகள் ஆகியவற்றை வழங்கி இணைப்பு உடன்பாடு மற்றும் அதன் செயல்முறைகள் மூலம் இந்தியாவுடனான காஷ்மீரின் ஒருங்கிணைப்பு கட்டமைக்கப்பட்டுள்ளது. பன்னெடுங்காலமாக இது நடைபெற்று வந்துள்ளது என்பது வசதியாக மறக்கப்பட்டுள்ளது.

மேலும் ஜம்மு-காஷ்மீர் மாநில அந்தஸ்து இரண்டு யூனியன் பிரதேசங்களாக மறுசீரமைக்க அரசியலமைப்புச்சட்டம் அனுமதிக்கிறதா என்பது குறித்த தீர்ப்பை நீதிமன்றம் வழங்கத் தவறியுள்ளது. நீதித்துறையின் தோல்விக்கு இது ஒரு வியக்க வைக்கும் எடுத்துக்காட்டு. ஒரு

மாநிலத்தை தரமிறக்க, அரசியலமைப்பின் மூன்றாவது பிரிவை முதன்முறையாக பயன்படுத்தியது குறித்த கேள்விக்கு தீர்ப்பளிக்க வேண்டாம் என நீதிமன்றம் முடிவு செய்தது அதிர்ச்சி அளிப்பதாகும்.

ஜம்மு-காஷ்மீர் மாநில அந்தஸ்து மீட்டெடுக்கப்படும் என அரசாங்க கூடுதல் தலைமை வழக்கறிஞர் (சொலிசிட்டர் ஜெனரல்) உறுதியளித்தார் என்பது தான் ஒரே காரணம். பரிகாரம் மேற்கொள்வதாகச் சொல்லப்படும் ஓர் உத்தரவாரம் எந்த ஒரு நடவடிக்கையையும் செல்லத்தக்கதாக, மாற்ற முடியுமா? அதே நேரத்தில், லடாக்கை தனி யூனியன் பிரதேசமாக உருவாக்கியதை நீதிமன்றம் உறுதி செய்துள்ளது. எந்த ஒரு மாநிலத்தின் சில பகுதிகளை பிரித்தெடுத்து புதிய யூனியன் பிரதேசம் உருவாக்கவும், அது குறித்து பரிசீலிக்கவும் இந்த தீர்ப்பு வழிவகுக்கிறது.

அதேபோல மாநில அரசு மற்றும் அதன் சட்டமன்றத்தின் சார்பாக தாங்களே முடிவெடுக்கும் குடியரசுத் தலைவரின் அதீத அதிகாரத்துக்கோ நாடாளுமன்றத்தின் தகுதிக்கோ எந்த வரம்பும் இல்லை என்ற நீதிமன்ற நிலைப்பாடு சமமான ஆபத்து நிறைந்தது. குறிப்பாக மாநிலச் சட்டப் பேரவைகளில் சட்டம் இயற்ற முடியாத அதிகாரங்கள் பற்றிய குறிப்பு, மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. இத்தீர்ப்பின் பின்னணியில் ஒரு மாநிலத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் ஒருபோதும் செய்யாத அசாதாரண நடவடிக்கைகளைத் தனது சொந்த நாடாளுமன்ற பெரும்பான்மை மூலம் நிறைவேற்றும் வகையில், மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சியைதானே உருவாக்கும் அரசாங்கங்கள் அமலாக்கலாம்.

அரசியலமைப்புச் சட்டத் திருத்தங்களுக்கு ஒப்புதல், மாநிலங்களுக்கு இடையே ஒப்பந்தங்களை ரத்து செய்துல், முக்கிய வழக்குகளை திரும்பப் பெறுதல், பெரிய அளவில் கொள்கை மாற்றங்களைக் கொண்டு வருதல், குடியரசுத்தலைவர் ஆட்சியின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மாநில நலன்களை சேதப்படுத்தினால், பின் நாட்களில் தேர்ந்தெடுக்கப்படும் அரசாங்கங்கள் மூலம் மீட்டெடுக்கப்படலாம் என்ற கருத்து மட்டும் சற்று ஆறுதல் அளிக்கிறது.

இந்தத்தீர்ப்பு ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் மீதான இந்தியாவின் இறையாண்மையை சரியான முறையில் நிலைநிறுத்துவதாகத் தோன்றினாலும், அதிகார அமைப்புகளின் வரம்புகளை வலுவிழக்கச் செய்கிறது. அச்சமடையும் அளவிற்கு கூட்டாட்சியை மாண்பிழக்கச் செய்கிறது. ஜனநாயக செயல்முறைகளைச் சிதைக்கிறது. ●

## “ பஞ்ச் ”

**மொரப்பா**



**“உனக்கான அரசியலை
நீ பேசவில்லையெனில்,
நீ வெறுக்கும் அரசியலால்
நீ ஆளப்படுவாய்”**

- தோழர் லெனின்

# ஹோசிமின் நினைவலைகள்

- பெரணமல்லூர் சேகரன்

வியட்நாம் வீரர் ஹோசிமின் 1890ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் நாள் பிறந்தார்.

"நாளை யானையின் குடல் பிடுங்கியெறியப்படும் வெற்றியைத் தீர்மானிப்பது ஆயுதங்களல்ல.. வெகுமக்களே" என்ற உண்மையை உலகுக்குப்பறைசாற்றியது தீரமிகு வியட்நாம். பிரெஞ்சு, அமெரிக்க ஆதிக்கத்திற்கெதிராகப் போராடிய வியட்நாமியர்களிடம் "யானையை எதிர்க்கும் வெட்டுக்கிளிகளின் போர்'' என்று சொன்னவர்களைப் பார்த்து வியட்நாமின் தலைவர் ஹோசிமின் "விமானங்களையும், பீரங்கிகளையும் எதிர்க்க மூங்கில் குச்சிகளைத் தவிர நம்மிடம் ஒன்றும் கிடையாது,. ஆனால் மார்க்சியம், லெனினியம் என்ற வழிகாட்டுதலில் நிகழ்காலத்தை மட்டுமல்ல,.. எதிர்காலத்தையும் பார்க்க முடிகிறது''.

"இன்று வெட்டுக்கிளிகள் யானையுடன் சண்டைபோடுகிறது. ஆனால் நாளை யானையின் குடல் பிடுங்கியெறியப்படும்'' என்று சொன்னது உற்சாகப்படுத்த மட்டுமல்ல,.. உண்மையில் நடந்தேறியது.

அமெரிக்க வல்லரசை மண் கௌவ வைத்த வியட்நாம் விடுதலைப் போர்த் தலைவர் தோழர் ஹோசிமின் அவர்களை "ஹோமாமா" என வியட்நாம் மக்கள் அன்புடன் அழைத்ததிலிருந்தே அம்மக்கள் அவர்மீது வைத்திருந்த அளப்பரிய அன்பையும் மதிப்பையும் உணரலாம். உலகத்தின் அசைக்க முடியாத வல்லரசு எனக் கருதப்பட்ட அமெரிக்கா வியட்நாம் மக்களிடம் படுதோல்வியைச் சந்தித்தது. 30 லட்சம் மக்களின் உயிர்த் தியாகத்தில் வியட்நாம் வெற்றியை ஈட்டியது. அமெரிக்காவின் படையில் 58000 பேர் கொல்லப்பட்டனர். ஆசிய ஆப்ரிக்க நாடுகளைக் கைப்பற்றும் பிரிட்டனுக்கும் பிரான்சுக்குமிடையிலான போட்டியில் வியட்நாம், லாவோஸ், கம்போடியா ஆகிய நாடுகள் பிரான்ஸ் தேசத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டன. எனினும் வியட்நாம் மக்கள் ஆக்கிரமிப்புக்கெதிரான போரைத் தீரமுடன் நடத்தினர். விடுதலைக்கான சுதந்திரப் போரை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் ஒன்றிணைந்து போராட்டத்தை வீச்சாகக் கொண்டு சென்றனர். அதன் விளைவாக பிரான்ஸ் வெளியேறியது. வியட்நாம் தெற்கு நோக்கி முன்னேறியது. ஐ.நா.சபை தலையிட்டு வெகுமக்களின் வாக்கெடுப்பின் மூலம் வியட்நாம் ஒன்றிணைக்கப்பட்டது. ஹனோயைத் தலைநகராகக் கொண்ட வியட்நாமும் சைக்கோனைத் தலைநகராகக் கொண்டு தென்வியட்நாமும்உருவாகின.

ஐ.நா.சபை வெகுமக்களின் வாக்கெடுப்பை நடத்தாத நிலையில் தென்வியட்நாம் மீது வபவியட்நாம் தாக்குதலைத் தொடங்கியது. 1955ல் மீண்டும் போர் ஆரம்பமானது. அமெரிக்கா தென்வியட்நாம் அரசுக்கு ஆதரவாக 1964ல் வடவியட்நாம் மீது விமான குண்டுத் தாக்குதல்நடத்தியது, அமெரிக்க வியட்நாம் போராகப் பரிணமித்தது. நச்சு ரசாயன நாபாம்குண்டுகளை ஏவி வீடு, வயல், நிலங்களை அழித்தது அமெரிக்கா. எத்தகைய தாக்குதலுக்கும்அஞ்சாமல் வியட்நாம் மக்கள் போராடி 1975ல் அமெரிக்காவை விரட்டி அடித்தனர். 58000 போர் வீரர்களை இழந்து அமெரிக்கா அவமானத்துடன் வெளியேறியது.

அமெரிக்கா ஏவிய நச்சுப்பொருட்கள் மற்றும் நாபாம்குண்டுகளால் வியட்நாம் மக்கள் மிகப்பெரிய பாதிப்பை அடைந்தனர். இத்தகைய மானுட விரோதச் செயல்களை எதிர்த்தும் அமெரிக்கா வியட்நாமை விட்டு முற்றாக வெளியேறவும் வலியுறுத்தி உலக அளவில் போராட்டங்கள் நடைபெற்றன.

1945ல் ஜப்பானின் ஹிரோஷிமா,நாகசாகி நகரங்களின் மீது அணுகுண்டுகளைப் போட்டு லட்சக்கணக்கான மக்களைக்கொன்று குவித்த ரத்தவெறி பிடித்த ட்ரூமன் வழியில் அமெரிக்க ஏகாதிபத்தியம் வியட்நாம் யுத்தத்தின் போது

பல மடங்கு நாசகரமான நாபாம் குண்டுகளை வியட்நாம் மீது வீசி வியட்நாமிய மக்களை அடி பணிய முயற்சி செய்த ஆணவத்திற்கும், அடங்காபிடாரிதனத்திற்கும் மொத்தமாக ஆப்பு வைத்து, வெறும் முங்கில் கழிகளையும், குச்சிகளையும் வைத்தே கொரில்லா யுத்தத்தின் மூலம் பீரங்கிகளையும், விமானங்களையும், நவீன குண்டுகளையும் கொண்ட அமெரிக்காவைப் புறமுதுகிட்டு ஓட வைத்தனர் வீர வியட்நாம் மக்கள்.

தோழர் ஹோசிமின் வாழ்ந்த மூங்கில் வீடு மிகவும் எளிமையாக அமைந்துள்ளது. தென்னைமரங்களும், மூங்கில்களும், வாழைமரங்களும் அருகில் ஒரு சிறு குளமும் உள்ள ரம்மியமான இயற்கை கொஞ்சுமிடம். எங்கும் பறவைகளின் கொஞ்சும் ஒலிகள், காற்றின் சலசலப்பில் எழும் இசையில் அமைந்த இடம். செய்தி தாள்களும், புத்தகங்களும், ஒரு தட்டச்சு எந்திரமும், படுக்கைக்கு பதிலாக பாய் விரிக்கப்பட்டுள்ளது. இதுதான் அவரின் வாழிடம். எந்த நேரமும் உழைப்பும், படிப்புமாக செயலாக்கத்தின் முன்மாதிரியாக இருந்துள்ளார்.

இது குறித்து சோவியத்தின் நிருபர் ஒருவர் பேட்டி கண்டபோது ஹோசிமின் அன்றாட வாழ்க்கை குறித்த கேள்விக்குப் பதில் அளிக்கையில் ஹோசிமின்,

“நான் அதற்குப்பழகிவிட்டேடேன்.

எப்போது வேண்டுமானாலும் எழுந்து கிளம்பி விடலாம், புரட்சியின் போதும், தலை மறைவு வாழ்க்கையின் போதும் இதனைக் கற்றுக் கொண்டேன். எழுந்து புறப்பட ஐந்து நிமிடங்களே போதுமானது’’ என பதிலளித்துள்ளார்.

"ஒரு நாளைக்கு எவ்வளவு நேரம் வேலை செய்கிறீர்கள் என்று கேட்ட போது“ பறவைகளோடு நான் எழுகிறேன், வானில் நட்சத்திரங்கள் தோன்றும் போது உறங்கச் செல்கிறேன்’’ என்றார்.

தோழர் ஹோசிமின் மிகக்கடுமையான உழைப்பாளி. சிறு வயது முதல் அவர் படிக்கும் காலத்தில் ரூசோவைக் கற்றபோது பிரெஞ்சு புரட்சியின் முழக்கமான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பதை எப்படி முழங்கினார், அந்த கோஷங்களின் பின்னுள்ள வரலாறு என்ன என்பதைத்தெரிந்துகொள்ள சிறுவயதிலேயே பிரான்சை நோக்கிச் சென்றார் கப்பலில். அப்போது எதுவும் தெரியாமல், உணவுக்கும், தங்கவும் என்ன செய்வாய் என்று நண்பர் கேட்டபோது “இரண்டு கைகளையும் உயர்த்தி பத்து விரல்களைக் காண்பித்து இது தான் மூலதனம்’’ என்றார். கால்சட்டையும், சுருட்டி விடப்பட்ட மேற்சட்டையும் அணிந்து கொண்டு எங்கு போக வேண்டுமென்றாலும் நடந்தே செல்லும் பழக்கத்தைத் தொடர்ந்து கடைப்பிடித்தார். மலைகளா? செங்குத்தான சிகரமா? வனம் அடர்ந்த காட்டுப்பாதையா? அனைத்திலும் நடந்தே சென்றார்

1930ல் வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கியது முதல் தனது இறுதி நாள் வரை மார்க்சிய லெனினியப் பாதையில் உறுதியாக நின்று அதுதான் அத்தனை செயல்களுக்கும் அடிப்படையான தத்துவம், வளரும் சமூக விஞ்ஞானம், பிரச்சனைகளின் தீர்வு அதில் தான் உள்ளது என்பதை உரக்கச் சொல்லி அதன் அடிப்படையில் புரட்சியின் பாதை என்ற புத்தகத்தை வியட்நாமின் புரட்சிக்கான கட்டமைப்பு குறித்து எழுதினார். அது தான் இன்று வரை வியட்நாம் கம்யூனிஸ்ட்களின் அடிப்படையான நூலாகப் போற்றப்படுகிறது.

அமெரிக்காவை விரட்டியடித்த குச்சி அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராக 1975 வரை நடத்திய கொரில்லா யுத்தத்தின் வீர நினைவுகளை இன்றும் பாதுகாத்து வைத்து வருகின்றனர். குச்சி என்ற பகுதியில் ஆண்களும், பெண்களும் 4, 6, 10 மீட்டர் ஆழத்தில் பூமியில் குழிகளையும், பட்டறைகளையும் உருவாக்கி அதன் பதுங்கி இருந்து போரை நடத்தினார்கள். கையில் வெறும் கட்டைதுப்பாக்கியும், மூங்கில் குச்சிகளை வைத்துக் கொண்டு நவீன விமானங்களையும், பீரங்கிகளையும் வைத்து ஆக்கிரமிப்பு யுத்தத்தை நடத்திய அமெரிக்காவை மண்ணை கவ்வ வைத்தது. அந்த மகத்தான சாதனை செய்த வீரர்களின் நினைவுகள் இன்று அங்கு போற்றப்படுகிறது. தொடர்ந்து அந்த வரலாறு இளம் தலைமுறைக்கு சொல்லிக் கொடுத்து தேச இறையாண்மை கட்டியமைக்கப்படுகிறது. வியட்நாமிய விடுதலைக்கான போராட்டத்தையும், மேற்கத்திய காலனிய ஆதிக்கத்திற்கெதிராகவும் 30 ஆண்டுகளுக்கு மேலாகவும் வீரமிகு

போராட்டத்தை நடத்தியவர்கள். இதன் பின்னணியிலேயே வியட்நாமிய கம்யூனிஸ்ட் கட்சி தேச மறு கட்டுமானம், நவீனமயமாக்கல், தொழில்மயமாக்கல் ஆகியவற்றில் கவனம் செலுத்தி வருகிறது. இதன் வழியில் அரசும் வீறுநடை போடுகிறது.

சோவியத்நாட்டில் நடைபெற்ற அக்டோபர் புரட்சியின் தாக்கமே வியட்நாமிய புரட்சியின் அடிநாதமாகும். தோழர் ஹோசிமின் ஒவ்வொரு நிமிடமும் மார்க்சிய லெனினிய பாதையில் செல்வதன் அவசியம் குறித்து தெளிவான பார்வையோடும், சொல்லிலிருந்து செயலை நோக்கி ஒவ்வொரு படியாக வியட்நாமின் வளர்ச்சிக்கு வித்திட்டவர். அவரின் வழியில் வளர்ச்சியடைந்த நாடுகளின் பட்டியலில் வியட்நாமும் வந்துவிடும் என்று உறுதியாக அறிவித்து அதற்கான திட்டங்களை அமுலாக்குவதில் உறுதியான நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறார்கள்.

இன்று வரை வியட்நாமிய மக்களுக்கு தேச நிர்மாணம் குறித்த புரிதலையும், தேச விடுதலைப் போர் குறித்தும், ஜனநாயகம், சமூக முன்னேற்றம் பற்றியும் தொடர்ந்து மக்களுக்கு போதித்து வருகிறது. “ அனைத்து மக்களும் நாகரிகமான வாழ்க்கை வாழ ஒன்றிணைந்த கட்டுமானத்தை உருவாக்குவது’’ என்ற முழக்கதோடு குடிமக்கள் சமூகத்தின் ஜனநாயகமும், சமத்துவமுமான வாழ்க்கையும், பலமான தேசம், உயர்தரமான வாழ்க்கை என்பதே குறிக்கோள் என்ற அடிப்படையில் கொள்கைகள் வகுக்கப்பட்டு நிர்வாக மற்றும் அரசியல் முறை உருவாக்கப்பட்டு அனைத்து மக்களின் பங்கேற்போடு திட்டங்கள் தீட்டப்படுகிறது.

அனைவருக்கும் கல்வி, சுகாதாரம் வியட்நாமில் உள்ள அனைத்து மக்களுக்கும் ஆரம்பக்கல்வி முழுமையாக உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. இன்றைய தினம் வரை மேல்நிலைக் கல்வி வரை 95 சதத்திற்கும் அதிகமான கிராமப்புற மக்கள் கல்வியறிவு பெற்றுள்ளனர். பள்ளிக்கல்வி அனைத்தும் அரசின் கட்டுப்பாட்டிலேயே பராமரிக்கப்படுவதால் ஏற்றத்தாழ்வற்று சமத்துவமான கல்வி வழங்கப்படுகிறது. உயர் கல்வி கற்க வாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன. அதே நேரத்தில் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக தேசப்பற்று, சுதந்திரப்போராட்ட வரலாறு, லெனினியம், மார்க்சியம் குறித்தும் கற்பிக்கப்படுகின்றன. அதே போல் சுகாதாரம் முழுமையாக கிடைப்பதாற்கான வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. சுகாதாரத்தின் கூறுகளான குடிநீர், ஊட்டச்சத்துமிக்க உணவு, மருத்துவம், கழிப்பறை, தூய்மையான வீடு, குப்பைகளற்ற சுற்றுப்புறச்சூழல்இவைகளை விரைவில் அனைவருக்கும் வழங்கிடுவோம் என்று நம்பிக்கையோடு அரசு நடைபயின்று வருகிறது.

சொல்லிருந்து செயலை நோக்கி உண்மையாய் இருத்தல், போற்றுதல் என்ற இரண்டு நல்லொழுக்கங்களில் ஹோசிமின் உறுதியாக இருந்தார். அடுத்தடுத்த தலைமுறைக்கு கற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்றார். வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சி இந்த கோட்பாடுகளைத்தாங்கி நிற்கிறது. ஆம் தொன்மையான முதாதையர்களின் வாரிசுகள், நான்காயிரம் ஆண்டுகளின் வரலாறு உடையது. அந்நிய படையெடுப்பாளர்களுக்கெதிராகவும், விடுதலைக்காகவும் போராடியவர்கள். எனவே தன் நாட்டுக்கும், மக்களுக்கும் உண்மையுடனும் நடந்து கொள்வது முதல் கடமை,.. ஒவ்வொருவருக்கும் பெற்றோர்கள் உடன் பிறந்தவர்கள் உண்டு.

அவர்களிடத்தில் அன்பு செலுத்த வேண்டும், உயர்வாக மதிக்க வேண்டும், ஏனெனில் உங்களுக்கு வாழ்வு அமைத்துக் கொடுத்தவர்கள் அவர்கள். இது இரண்டாவது கடமை. இந்த இரண்டு கடமைகளான விசுவாசமும், போற்றுதலும் ஒன்றோடென்று இணைந்தவை. என்ற இந்த கோட்பாட்டை உறுதியாகப் பின்பற்றி நிற்கின்றன. அதனால் தான் வெட்டுக்கிளிகளால் யானையின் குடலைப் பிடுங்கி எறிய முடியும் என்று நம்பிக்கையோடு யுத்தகாலத்திற்கு மட்டுமல்ல எதிர்காலத்திற்கும் சேர்த்து சொன்னார்ஹோசிமின். ஆம்,..

‘‘நம் மலைகள் எப்போதும் நம்மோடுதான் நம் ஆறுகள் எப்போதும் நம்மோடுதான் நம் மக்கள் எப்போதும் நம்மோடுதான் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் தோற்கடிக்கப்படுவர் நம் நாட்டை நாம் மீண்டும் உருவாக்குவோம் புதிதாய் இன்னும் பத்துமடங்கு அழகாக.,’’

*(மே19 ஹோசிமின் பிறந்தநாள்)* ●

# தடைகளைத் தகர்த்து, சாகசங்களை நிகழ்த்தி, உரிமைகளை வென்றடுக்க அமைப்பு தினத்தில் ஒன்றுகூடி சூளுரைப்போம்!

**– மு. அன்பரசு**

தொழிலாளர்களுக்கு எப்படி மே 1ஆம் தேதி மிக முக்கியமான நாளோ அதுபோன்று அரசு ஊழியர்களுக்கு மே 6ஆம் நாள் மிக முக்கியமான ஒன்றாகும். தமிழ்நாட்டில் உள்ள அரசுத்துறைகளில் பணியாற்றும் ஊழியர்களின் உரிமைகளை தக்க வைக்கவும் புதிய உரிமைகளை போராடிப் பெறவும் சரியானதொரு அமைப்பு இல்லாத ஒரு இருண்ட காலகட்டத்தில் கலங்கரை விளக்கமாகத் தோன்றியது தான் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், கெஞ்சிப்பேசியோ, அடிபணிந்தோ. ஜால்ரா தட்டியோ, சலாம் போட்டோ அரசு ஊழியர்களின் கௌரவத்தை அடகு வைக்காமல் போராடிப் பெற வேண்டியவற்றை போராடியே பெறுவோம் என்ற கொள்கை உறுதியுடன் 1984ஆம் ஆண்டு மே 6ம் நாள் தோன்றிய இயக்கம்தான் தமிழநாடு அரசு ஊழியர் சங்கம், இதற்கு முன்பு இருந்த சங்கங்கள் எல்லாம் முதலமைச்சர்களையும், பிற அமைச்சர்களையும் பாராட்டி பேசியும், கெஞ்சிக்கூத்தாடி உரிமைகளை மன்றாடிக் கேட்டுக்கொண்டிருந்த நேரத்தில் அரசு ஊழியர் சங்கம் மட்டும்தான் அரசு ஊழியர்களுக்கான உரிமைகளில் எந்தவித சமரசமும் செய்து கொள்ளாமல் உரிமைகளை கெஞ்சிக் கேட்பது கேவலம் போராடிப் பெறுவதே வீரம் என்ற போர்முழக்கத்தை முன்வைத்து இயக்கத்தை துடிப்புள்ள இயக்கமாக மாற்றியது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் உருவாக்கப்பட்டதன் முக்கிய நோக்கங்களில் உரிமைகளை போராடி வென்றெடுப்பதும் மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியத்தை தமிழ்நாடு அரசு ஊழியர்களும் பெற்றே தீர வேண்டும் என்ற என்ற உறுதிப்பாடும் முதன்மையானவை, அதை பெற்றுத்தந்த பெருமையும் இதற்கு உண்டு.

ஆனால் இந்த நாற்பதாண்டு கால அரசு ஊழியர் வரலாற்றில் 2003ஆம் ஆண்டில் நாம் இழந்துவிட்ட பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் கொண்டுவந்தே தீர்வது என்று கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக அரசாங்கத்திடம் போராடி வருகிறோம். கடந்த இருபது ஆண்டுகளாக நம்முடைய தொடர் போராட்டம் காரணமாக நம்முடைய வாழ்வாதார கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக முதல்வர் அவர்கள் ஒப்புக்கொண்டாலும் இன்றுவரை அது நிறைவேறாமல் இருப்பது ஊழியர்களிடையே மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது. அரசை நிர்ப்பந்திக்க. ஒப்புக்கொண்ட உரிமைகளை முழுவதுமாக பெற்றிட கடுமையான போராட்டங்கள் மட்டுமே நமக்கிருக்கின்ற ஒரே பலமான ஆயுதம். அதை இந்த அமைப்புதினத்தில் அழுத்தி பதிவுசெய்ய வேண்டியுள்ளது. இதைப்போலவே ஊதிய முரண்பாடுகள். காலிப்பணியிடங்கள். ஒப்பந்தமுறை நியமனங்கள், அவுட்சோர்சிங் நடைமுறைகள். அரசுத்துறைகளை தனியார்மயமாக்கும் நடவடிக்கைகள் போன்றவற்றை எதிர்த்துப் போராட வேண்டிய அவசியத்தையும், உறுதியையும் நாம் இந்த அமைப்புதினத்தில் மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அரசு ஊழியர்கள் நினைத்தால் பெறமுடியாத உரிமைகள் இல்லை என்பது கடந்த கால வரலாறு. அதை நிகழ்காலத்தின் நிதர்சனமாக நிலைநிறுத்த வேண்டிய தலையாய கடமை நம் ஒவ்வொருவரிடமும் உள்ளது. அதை நிகழ்த்திக்காட்டிட அஞ்சா நெஞ்சமும், தளராத மனஉறுதியும். நிலையான தொடர்முயற்சிகளும் மிக முக்கியத் தேவைகள் ஆகும்.

ஒரு அமைப்பின் விலைமதிக்கமுடியாத செல்வங்கள் யார் என்று கேட்டால் அது சரியான முறையில் பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்கள் தான். யார் இடையூறுகளைக் கண்டு ஓடி ஒளியாது. அஞ்சி நடுங்காது. அவைகளை வெல்வதற்கும் களைந்தெறிவதற்கும் தயாராக நின்று அந்த இடையூறுகளை நேரடியாகச் சந்திக்கிறார்களோ... அவ்வாறு இடையூறுகளை எதிர்த்துப் போராடுபவர்களால் எந்தத் தடைகளையும் தகர்க்க முடியும் சாகசங்களை நிகழ்த்த முடியும். அது தனி மனிதர்களால் சாத்தியமில்லை. அத்தகைய தோழர்களின் கட்டமைப்பை நாம் இன்னும் உறுதிபடுத்திடவே இந்த அமைப்பு தினத்தில் நாம் உறுதி ஏற்பதை நம் முழுமுதற்கடமையாகக் கொண்டிருக்கிறோம்.

ஒரு இயக்கத்தின் பாதை என்பது நேரான அல்லது எளிமையான தன்மை கொண்டதல்ல, அது கரடுமுரடானது தடைகள் பல நிறைந்தது. இவைகளை உணர்ந்து சரியாக வழிநடத்த, தொலைநோக்கும் மனஉரமும் கொண்ட தலைமை தேவை. வெற்றி என்பது தானாகவே கிடைப்பதல்ல. அதை போராட்டங்கள் மூலம்தான் பறித்தெடுக்க முடியும் என்பதை வரலாறுகளும் வாழ்க்கையும் நமக்கு போதித்துக் கொண்டே இருக்கின்றன. தொழிற்சங்க இயக்கத்தில் ஒரு கட்டம்வரைதான் சட்டத்திற்கு உட்பட்ட மனநிலை இருக்க வேண்டும். சமூக மாற்றத்திற்கான போராட்டத்தின் ஒரு பகுதியே உடனடிக் கோரிக்கைகான போராட்டம். எனவே வாழ்க்கைக்காகப் போராடுவதும் போராடுவதற்காக வாழ்வதும் தவிர்க்க இயலாதது. உழைக்கும் மக்களுடைய இயக்கங்களிலிருந்து ஒதுங்கி நிற்பதோ... அன்றி செயல்பாடுகளிலிருந்து பிரிந்து நிற்பதோ... அரசு ஊழியர்களுக்கோ அல்லது அவர்களுடைய ஸ்தாபனங்களுக்கோ ஏற்ற நடைமுறைகளல்ல. அரசு ஊழியர்கள், கரத்தால் உழைக்கும் மக்களோடிணைந்த, கருத்தால் உழைக்கும் ஒரு பிரிவினர்தான்.

இன்று எங்கு பார்த்தாலும் யோகா. மனவளக்கலை என பயிற்சிக்கூடங்களை முதலாளிகள் நடத்துகிறார்கள். எதற்காக...? கோபங்கள், போர்க்குணங்கள், சோர்வுகள் நீக்கி சுத்திகரிக்கப்பட்ட தொழிலாளிதான் அவர்களுக்குத் தேவை. தடையற்ற உற்பத்திக்கு தோதான தொழிலாளி தயாரிக்கப்படுகிறான். அதன்காரணமாக அவனுக்கு ஊதிய உயர்வு, பதவி உயர்வு போன்றவை தடுக்கப்படும்போது எதிர்க்க முடியாமல் முடக்கப்படுகிறான். கிட்டத்தட்ட அடிமை நிலைக்கு அவன் மாற்றப்படுகிறான். இந்த போக்கு அரசு அலுவலகங்களிலும் மெல்ல பரவி வருகிறது. இன்று, "எனக்கு மட்டும் கிடைத்தால் போதும் நான் மட்டும் தப்பித்துக்கொள்ள ஏதாவது ஓட்டை கிடைக்கிறதா பாருங்கள்... உலகமயம், தனியார் மயம் வந்தால் வந்துவிட்டுப் போகட்டும் நமக்கு எல்ஈடி டிவியும் தவணையில் காரும் கிடைக்கிறதா பாருங்கள்" என்கிற அளவுக்கு சுயநலமிக்கவர்களாக பல ஊழியர்கள் திசைமாறிச் செல்கிறார்கள். அவர்களை சரிப்படுத்தி அவர்களிடம் உள்ள மத்தியதர வர்க்க மனோபாவங்களை மாற்றி புதியதொரு ஊழியர் வர்க்கத்தை உருவாக்க வேண்டிய பெருங்கடமை இந்த ஸ்தாபனத்திற்கு உள்ளது.

ஒரு ஊழியர் வர்க்கப்பார்வை இல்லாமலேயே சங்கத்தை தனக்குத் தேவையான ஊதிய ஏற்றம் மற்றும் இதர படிகளை பெற்றுத்தரும் ஏஜென்ஸியாக பார்க்கும் பார்வை பரவியிருக்கிறது. அதிகாரிகளுக்கு பயப்படுவதும் போராட்டங்களுக்கு பயப்படுவதுமான குணங்கள் இத்தனை ஆண்டுகால இயக்கத்திற்குப் பின்னும் இன்னமும் நம் தோழர்கள் கணிசமானோரிடம் உள்ளது. சில்லறைப் பணப்பயன்களுக்கு பின்னால் மயங்கி தேசத்தின் எதிர்கால நலன்கள் பற்றி சற்றேனும் சிந்திக்காமல் ஆளும் அரசுக்கு ஜால்ரா போடும் சங்கங்களுக்குப் பின்னால் ஏராளமான நம் ஊழியர்கள் நிற்கிறார்கள் அது ஏன்? இதற்குக் காரணம் கலாச்சார ரீதியான தலையீட்டை தொழிற்சங்க இயக்கங்கள்

செய்யத் தவறியதன் விளைவாக ஆளும் வர்க்கம் தட்டிக்கேட்க ஆளில்லாத பேட்டை ரவுடியாக, அவர்களை பிக்பாக்கட் அடித்துக்கொண்டு இருக்கிறது.

என்றுமில்லாத அளவுக்கு நாம் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறோம். என்ன வேலை செய்வது? எந்த கட்சியில் இருப்பது? எந்தவிதமாகக் கல்யாணம் செய்து கொள்வது? எந்தவிதமாக குடும்பம் நடத்துவது? எந்தச் செய்தியை நம்புவது? எத்தனைப் பேப்பரை படிப்பது? என்று வாழ்வு ஒரு முற்றான நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது. அது இன்னும் கீழே வறுமை. வேலையில்லாத் திண்டாட்டம். அரசியல்வாதிகளின் பொய் வாக்குறுதிகள். ஆட்சியாளர்களின் துரோகம் என மக்களை வாட்டி வதைக்கிறது. இதிலிருந்து மீண்டெழ வேண்டுமெனில்...? நாம் நமது அமைப்பை இன்னும் பலப்படுத்தியாக வேண்டும். ஊழியர்களின் மனங்களை வெல்ல வேண்டும். முழுமையான தொழிற்சங்க பயிற்சிக்கு ஊழியர்களை உட்படுத்தி போராட்ட களங்களுக்கு தயார்படுத்த வேண்டும். தளராத மனஉறுதிகளை அவர்கள் பெற்றிட நாம் வென்ற உரிமைப் போராட்ட வரலாறுகளை கூறிக்கொண்டே இருக்க வேண்டும்.

முரண்கள் ஏதுமில்லா அணுகுமுறை. தீர்வு குறித்த தெளிவு. காலம் எதிர்பார்க்கிற கடப்பாடு, ஊழியர் நலன். மக்கள் மீது அக்கறை, தொழிற்சங்க உரிமை... போன்ற கோட்பாடுகளில் உறுதியாக நின்றே எந்தப்பிரச்னையையும் நாம் அணுகுகிறோம். சங்கங்களைப் பொறுத்தவரை மாநிலத்திற்கு மாநிலம் ஒரு நிலை என்பது இல்லை. எல்லா மாநிலங்களிலும் ஒரே உறுதியான நிலைதான். உழைக்கும் மக்களுக்கு உண்டானதை வழங்காமல் அதைச் சுரண்டி தின்று கொழுத்திருக்கும் ஆதிக்க சமுதாயத்தை அடித்து வீழ்த்தும் வல்லமையும் ஒருமைப்பாடும், உழைக்கும் மக்களுக்கான உரிமைகளை காப்பதுவும், இழந்த உரிமைகளை மீட்பதுவுமான வலிமையான போராட்டங்களும், உறுதிப்பாடுகளும்தான் இன்றைய இன்றியமையாத தேவைகளாகியுள்ளன. மக்களை ஒருமுகப்படுத்தி நேர்மையான, நியாயமான உரிமைகளுக்காக அவர்களை போராட வைக்கவும், அரசுகளை தன் காலடியில் வீழ்த்தியிருக்கும் சர்வாதிகார கார்ப்பரேட்டுகளின் திமிரை அவர்களுக்கு கைகட்டி சேவகம் செய்கிற அரசியல் வாதிகளை அப்புறப்படுத்தி சமதர்ம சமத்துவ ஜனநாயகத்தை ஏற்படுத்தும் முயற்சியில் இன்றிலிருந்து அடியெடுத்து வைப்போம். நம்முடைய முன்னோடித் தோழர்கள் பெற்றுத்தந்த உரிமைகளை எப்பாடு பட்டேனும் காப்போம் என்ற உறுதியை இந்த அமைப்பு தினத்தில் சூளுரைப்போம். புதிய புதிய போராட்டங்களை செய்துகொண்டே இருப்போம். நாம் இதுவரை பெற்ற உரிமைகள் அனைத்தும் அரசின் கருணையால் பெற்றவையல்ல ஓயாத போராட்டத்தினால் பெற்றோம் என்பதை ஒவ்வொரு ஊழியருக்கும் புரிய வைத்து அவர்களை ஸ்தாபன அமைப்புக்குள் கொண்டு வந்து சேர்ப்போம். இதை நாம் இந்த அமைப்பு தினத்தின் உறுதிமொழியாக ஏற்போம். போராட்டங்கள் பலமானால்தான் உரிமைகள் நம் வசமாகும் என்கிற கோட்பாட்டை நாம் தாங்கிப் பிடித்தக்கொண்டே நம் கொடிகளையும் பதாகைகளையும் தூக்கி நிறுத்துவோம். உயர்ந்து பறக்கட்டும் நம் கொடிகளும், பதாகைகளும். உயரப்பறக்கும் கொடிகளும் பதாகைகளும் வானம் முட்டட்டும். வானம் முட்டி பூட்டி வைக்கப்பட்டிருக்கும் உரிமைகளின் கதவுகளை திறக்கட்டும் தேவைப்பட்டால் உடைக்கக் கூடச் செய்யட்டும். அப்போது தான் ஒரு இயக்கத்தின் ஒரு ஸ்தாபனத்தின் வலிமை என்ன என்பதை ஆட்சியாளர்களும் அவர்களை ஆட்டுவிக்கும் அதிகார வர்க்கத்தினரும் அறிவார்கள். அதற்காக இன்னும் ஒருமுறை இந்த அமைப்பு தினத்தில் நாம் அனைவரும் அர்ப்பணிப்பு உணர்வோடு நம்முடைய உரிமைகளை வென்றெடுக்க சூளுரைப்போம். ●

# ஜனநாயகம் மற்றும் ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பதே பாராளுமன்றத் தேர்தலின் மையப் பிரச்னையாக இருக்கும் !

**- நமது நிருபர்**

பிரதமர் மோடி அவர்கள் அவ்வப்போது ஜனநாயகம் பற்றி, மக்களைப் பற்றி, ஏழைகளைப்பற்றி இளைஞர்களைப் பற்றி பேசுவார். ஆனால் அந்த அதற்கும் உண்மை நிலைக்கும் தொடர்பு இருக்காது. அப்படி அவர் பேசியவற்றில் சிலவற்றினையும் உண்மை நிலவரங்களையும் பார்ப்போம். 2024 மார்ச் 14 அன்று பொதுமக்களுக்கு எழுதிய திறந்த கடிதத்தில் நரேந்திர மோடி "ஜனநாயகத்தின் அழகு பொதுமக்களின் பங்கேற்பில் உள்ளது" என்று கூறியுள்ளார். .

ஆனால் உண்மையில் நிகழ்ந்திருப்பது என்னவென்றால் கடந்த 10 ஆண்டுகளில் நாட்டின் ஜனநாயகம் மற்றும் ஜனநாயக உரிமைகள் மீது முன்னெப்போதும் இல்லாத வகையில் தாக்குதல் தொடுக்கப்பட்டு வந்துள்ளது. இந்தியாவில் ஜனநாயகம் கடுமையாக அரிக்கப்பட்டு வருவதாக பல்வேறு சர்வதேச அமைப்புகள் குறிப்பிட்டுள்ளன. பாஜக ஆட்சியில் நாடாளு மன்றத்தின் தரம் திட்டமிட்டு குறைக்கப்பட்டுள்ளது. முதலாவது மோடி ஆட்சியில் (2014 - 2019) மக்களவையில் சராசரி அமர்வு நாட்கள் 135 ஆக இருந்தது. கடந்த பிப்ரவரியில் முடிவடைந்த தற்போதைய 17வது மக்களவையில் சராசரி அமர்வு என்பது 55 நாட்கள் மட்டுமே!

2019 முதல் நாடாளுமன்றத்தின் சமீபத்திய பதவிக்காலம் வரை சட்டமசோதாக்களில் 13 சதவீதம் மட்டுமே நாடாளுமன்றக் குழுக்களின் ஆய்வுக்கு அனுப்பப்பட்டன. 2009-2014 காலப்பகுதியில் செயல்பட்ட நாடாளு மன்றத்தில், அதாவது மோடி ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, 71 சதவீத மசோதாக்கள் குழுக்களின் ஆய்விற்கு அனுப்பப்பட்டன.

2023ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத்தொடரில் 146 எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அவைகளில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டது, முன்னெப்போதும் இல்லாதது.

2019க்கும் 2023க்கும் இடையில், சராசரியாக, சுமார் 80 சதவீத பட்ஜெட் விவாதமின்றி நிறைவேற்றப்பட்டது. 2023ஆம் ஆண்டில் முழு பட்ஜெட்டுமே விவாதமின்றி நிறைவேற்றப்பட்டது.

அரசியலமைப்பின் 19வது பிரிவு கருத்து சுதந்திரம், சங்கம் அமைக்கும் சுதந்திரம், நடமாடும் சுதந்திரம் போன்றவற்றை குடிமக்களுக்கு வழங்குகிறது. இந்த அடிப்படை உரிமைகள் அனைத்தும் இப்போது பறிக்கப்பட்டு வருகின்றன.

**2. மோடி சொன்னது**

"பல கட்சிகள் பங்கேற்கும் தேர்தல்கள், சுயேச்சையான நீதித்துறை, சுதந்திரமான ஊடகம் போன்ற கட்டமைப்பு அம்சங்களே ஜனநாயகத்தின் மிக முக்கியமான கருவிகள் ஆகும்" – 2021 டிசம்பரில் நடை

பெற்ற ஜனநாயக ரீதியாகச் செயல்படும் நாடுகளின் உச்சி மாநாட்டில் நரேந்திர மோடி அவர்கள் பேசியது இது. ஆனால் உண்மை நிலவரத்தைப் பாப்போம்.

**ஊடக சுதந்திரம்**

'எல்லைகளற்ற நிருபர்கள்' அமைப்பு தயாரித்த உலக பத்திரிகையாளர் சுதந்திர குறியீட்டின்படி ஊடக சுதந்திரத்தில் உலகில் உள்ள 180 நாடுகளில் இந்தியா

161வது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது. ஊடகங்களின் பெருநிறுவன உரிமையாளர்களை அச்சுறுத்துவதன் மூலம் பெருமளவிலான வாசகர்களைக் கொண்ட முக்கிய தொலைக்காட்சி மற்றும் அச்சு ஊடகங்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட தொலைத்தொடர்பு சட்டம், தகவல் தொழில்நுட்ப திருத்த விதிகள்; ஒளிபரப்பு மசோதா ஆகிய அனைத்துமே ஊடகங்கள் மீதுஅரசின் கட்டுப்பாடு மற்றும் ஒடுக்குமுறைக்கு வழி வகுப்பவை ஆகும். நியூஸ் கிளிக் நிறுவனர்

விஷயத்தில் நடந்ததுபோல, தேசத்துரோக விதி மற்றும் உபா சட்டம் கூட அவர்களுக்கு எதிராக பயன்படுத்தப்படும் அபாயம். ஆளும் கட்சிக்குச் சாதகமான பெருவணிக நிறுவனங்களின் கைகளில் ஊடகங்களின் குவிப்பு மற்றும் கட்டுப்பாடு 80 கோடி பார்வையாளர்களைக் கொண்ட 72 தொலைக்காட்சி சேனல்களுக்குச் சொந்தக்காரராக முகேஷ் அம்பானியை இட்டுச் சென்றுள்ளது.

**எதிர்கட்சிகளை ஒடுக்குதல்**

ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளையும் ஒடுக்குவதன் மூலம் ஒரு கட்சி சர்வாதிகாரத்தை நிறுவுவதே மோடி மற்றும் பாஜகவின் நோக்கமாகும். இதற்காக, அமலாக்க இயக்குநரகம் (இடி), சிபிஐ மற்றும் வருமானவரித்துறை போன்ற ஒன்றிய அரசின் அமலாக்க அமைப்புகள் எதிர்க்கட்சி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்களை குறிவைக்க பயன்படுத்தப்படுகின்றன. தற்போது, பல்வேறு எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த ஏராளமான தலைவர்கள் மீது அமலாக்கத்துறை, சிபிஐ விசாரணை மற்றும் வழக்குகள் உள்ளன.

ஜார்க்கண்ட் முதல்வரை அமலாக்கத்துறை கைது செய்து சிறையில் அடைத்தது. தில்லி துணை முதல்வர் கடந்த ஓராண்டிற்கும் மேலாக சிறையில் அடை பட்டுள்ளார். இப்போது தில்லி முதல்வரும் சிறையில் தள்ளப்பட்டுள்ளார். ஒன்றிய அரசு நிறுவனங்களின் விசாரணை மற்றும் கைது அச்சுறுத்தல் காரணமாக பல எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் பாஜகவிற்கு தாவிவிட்டனர். சிவசேனா, தேசியவாத காங்கிரஸ் போன்ற கட்சிகள் இத்தகைய தந்திரங்களால் உடைக்கப்பட்டுள்ளன.

**கண்காணிப்பு**

எதிர்க்கட்சித் தலைவர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களின் தொலைபேசிகளில் பெகாசஸ் நிறுவனத்தின் உளவு மென்பொருள் பதிக்கப் பட்டுள்ளது அம்பலமாகியுள்ளது. டிஜிட்டல் முறையிலான தனிப்பட்ட தரவுகளின் பாதுகாப்பு சட்டம் தனிநபர் அந்தரங்க உரிமையை கடுமையாக மீறுகிறது. தனிப்பட்ட தகவல்கள் அனைத்தையும் அரசு கண்காணிப்பு அமைப்புகளுடன் பகிர்ந்து கொள்ளலாம் என விதி உருவாக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட தபால் அலுவலகச் சட்டம், சந்தேகத்திற்கு உரியதாக இருப்பின், ஒரு பார்சலை திறந்து மேலதிக விசாரணைக்காக சுங்கத்துறை அல்லது வேறெந்த ஓர் அரசு நிறுவனத்திற்கும் அனுப்பிவைக்க எந்தவொரு அரசு அதிகாரிக்கும் அதிகாரம் அளிக்கிறது. பல்வேறு அரசுத் திட்டங்களுடன் கட்டாயமாக இணைக்கப்பட்டுள்ள ஆதாரின் பயன்பாடு அனைத்து தனிப்பட்ட தரவையும் கைப்பற்ற அரசிற்கு உதவுகிறது.

மோடி அரசின் உத்தரவின் பேரில் 2022இல் 84 முறை இணைய தள செயல்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளது.

**ஒற்றையாட்சி முறை**

மக்களாட்சி முறையின் இன்றியமையாத அம்சம் கூட்டாட்சிக் கோட்பாடு ஆகும். இந்தியா என்பது மாநிலங்களின் ஓர் ஒன்றியம் ஆகும். ஆனால் பாஜக – ஆர்எஸ்எஸ் ஆட்சி மாநிலங்களின் நியாயமான உரிமைகளையும் வளங்களையும் பறிக்கும்படியான ஒரு மையப்படுத்தப்பட்ட ஒற்றையாட்சி முறையை உருவாக்க விரும்புகிறது. மாநிலங்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட எதிர்க்கட்சிஆளும் மாநில அரசுகளின் உரிமைகள் மீது காட்டுமிராண்டித் தனமான தாக்குதலை தொடுத்து வருகிறது.

ஜம்மு-காஷ்மீர் மாநிலம் சிதைக்கப்பட்டு, இரண்டு யூனியன் பிரதேசங்களாக மாற்றப்பட்ட விதம் தான் மாநிலங்களின் உரிமைகள் மீதான மிக மோசமான தாக்குதல் ஆகும். மாநில விவகாரங்களில் தலையிட ஆளுநர்களை தவறாகப் பயன்படுத்துவது; போதிய நிதி ஆதாரங்களை மறுப்பது; கடன் வாங்கும் உரிமை மறுக்கப்படுவது; மாநில விவகாரங்களில் ஒன்றிய அரசின் உத்தரவுகளை திணிப்பது ஆகிய அனைத்தும் ஜனநாயகம் மற்றும் கூட்டாட்சி அமைப்பின் மீதான தாக்குதலே ஆகும்.

இந்துத்துவ – கார்ப்பரேட் கூட்டணியில் இருந்தே ஜனநாயகத்தின் மீதான தாக்குதலும் தடையும் உருவெடுக்கின்றன. நவீன தாராளமயக் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்லவும், இந்துத்துவ விழுமியங்களை சமூகத்தின் மீது திணிக்கவும் அதிக அளவு எதேச்சதிகாரம் தேவைப்படுகிறது. மோடி அரசால் முன்னெடுக்கப்படும் இந்துத்துவா சர்வாதிகார ஆட்சியின் இருப்பு ஜனநாயகம் மற்றும் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கு ஒரு நீடித்த அச்சுறுத்தலை முன்னறிவிப்பதாக அமைகிறது. எனவே, ஜனநாயகத்தையும், ஜனநாயக உரிமைகளையும் பாதுகாப்பதற்கான போராட்டம் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு மையமான பிரச்சனையாக மாறியுள்ளது. ●

கவிதை

# அமைப்பு தினத்தில்...

**– பெரணமல்லூர் சேகரன்**

வெந்ததைத் தின்று
விதிவரின் சாகும் கூட்டமாய்
மிதிபட்ட காலம் ஒன்று

முந்தி முனைமுகத்து நிற்கும்
முற்போக்கு அமைப்பு
முகிழ்த்த மாபெரும் நாள் என்று?

திண்டாடும் ஊழியர்க்கு
கொண்டாடும் நாளெது?

மண்டும் பிற்போக்கு அழுக்ககற்ற
தொண்டுள்ளத்துடன்
யாண்டும் அமைப்பு தோன்றிய நாளது!

ஊழியர் நலனில்
சமரசமற்ற போருடன்
சண்டமாருதத்திற்குக்
கங்கனம் கட்டிய நாளது!

மே ஆறு
வழமையாய் கிழியும்
தினத்தாளன்று அரசு ஊழியர்க்கு

எண்பத்து நான்கில்
எழுச்சியுடன் துவங்கிய
உடைவாளெனும் அமைப்பவர்க்கு

ஆளும் வர்க்க அடிவருடும்
தலைமையின் கீழ்
அடகு வைக்கப்பட்டிருந்த அமைப்பு

யானை பலமிக்கதாக
ஊழியர்களின் உற்ற தோழனாக
அமைப்பை மாற்ற
தூங்கா நகரில் கருத்து விதைப்பு!

அரசு எதுவாக இருப்பினும்
முரசு கொட்டும் உரிமைப் போர்களை
அடக்கும் அடக்குமுறைக் கோலம்!

புரிந்ததும் புரிய வைப்பதுமான
பரந்துபட்ட பணியில்
நிறைந்த அர்ப்பணிப்புடன்
களமிறங்கிய காலம் !

ஒன்றுபட போராட முன்னேற
நன்று வகுத்த கொள்கைகள்
என்று முயர்த்தும் போர்க்கோலம்!

தர்க்கம் நிறைந்ததாய் வேற்றுமை நீங்க
வர்க்க ஒற்றுமைப் பாடம் புகட்டும் ஓங்க!

கிளர்ச்சியும் பரப்புரையுமென
தளர்ச்சியிலாது பயணித்த பாதை
நீண்டது நெடியது!

நாற்பது ஆண்டுகளின்
நாம் பயணித்த பாதை
சந்தித்த சோதனைகள் கொடியது!

தொடுத்த போர்களும்
ஈட்டிய வெற்றிகளும்
காட்டிய படிப்பினைகளும்
அளவிடற்கரிது!

அமைப்புக்குள் எழுவன
அமைப்புக்குள் விவாதித்தல்
அமைப்பைச் சரியாக்குதல்
அமைப்பில் சரியாகுதல்
அமைப்புக்கழகு
மற்றவை இழுக்கு!

ஊர் இரண்டுபட
கூத்தாடி பாடு கொண்டாட்டமாய்
ஊர் திண்டாட்டமாய்
நேர்நின்றமைதல்
ஓரடி முன்னால்
ஈரடி பின்னால்!

அரசின் பிரித்தாள் சூழ்ச்சியால்
அமைப்புக்கு வேண்டாம் வீழ்ச்சி
காக்க வேண்டும் எழுச்சி!

இதுவரை இல்லாத சோதனை
இப்போது காணும் வேதனை
தப்பாது பற்றுவோம் தொழிற்சங்க போதனை
அமைப்பை உருக்கென உயர்த்தலே சாதனை!

மாணிக்க ஆண்டின் நிறைவு
மாணிக்கமாக அமைப்பின் உயர்வு
நமக்கு வேண்டாம் அயர்வு!

●

கட்டுரை

# தேர்தல் பத்திர ஊழல் பாஜகவின் கிரிமினல் குற்றம்

**- ஜி.ராமகிருஷ்ணன்**

“தேர்தல் நிதி பத்திரங்கள் தேர்தல் அரசியலில் கருப்புப் பணத்தின் செல்வாக்கை கையாள்வதில் ஒரு முக்கியமான முதல் படியாகும். அதில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் காலப்போக்கில் கவனித்துக் கொள்ளப்படும். தேர்தல் பத்திரங்களுக்கு எதிராக போராட்டம் நடத்துவோர் கூடிய விரைவில் வருந்துவார்கள்”.

- சில தினங்களுக்கு முன்பு தந்தி தொலைக்காட்சிக்கு பிரதமர் அளித்தபேட்டியில்மேற்கண்டவாறுதிருவாய்மலர்ந்துள்ளார். கடந்தபிப்ரவரி15 அன்று தேர்தல் நிதி பத்திரம் அரசியல் சட்டத்திற்குவிரோதமானதுஎன்றுஉச்சநீதிமன்றம்தீர்ப்பளித்தது. 45 நாட்கள் பொறுத்திருந்து இப்போது, தமது அரசு உருவாக்கிய, அரசியல் சட்டத்திற்கு விரோதமான அந்த திட்டத்தை மோடி நியாயப்படுத்தியிருக்கிறார். மோடி மட்டுமல்ல, இவர்களுக்கெல்லாம் (ஒட்டுமொத்த பாஜக ஒன்றிய அரசுக்கு) நாக்பூரிலிருந்து வழிகாட்டக்கூடிய ஆர்எஸ்எஸ் அமைப்பின் பொதுச் செயலாளர் தத்தேத்ரியா ஹோசேபேல் “தேர்தல் பத்திர திட்டம் திடீரென்று உருவாக்கப்பட்டதல்ல. ஒரு புதிய திட்டம் கொண்டுவரப்பட்டால் சில கேள்விகள் எழத்தான் செய்யும்” என நியாயப்படுத்தியிருக்கிறார்.

தேர்தல் பத்திரங்கள் தொடர்பான உச்சநீதிமன்ற உத்தரவை முழுமையாக மதிப்பதாகக் குறிப்பிட்டுள்ள மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, “அரசியலில் கருப்புப் பணத்தை ஒழிக்க இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. திட்டத்தை ரத்து செய்வதற்கு பதிலாக அதை மேம்படுத்தியிருக்க வேண்டும்” என்று கூறினார். ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா உச்சநீதிமன்ற தீர்ப்பை மதிப்பதாக கூறிவிட்டு நளினமாக நிராகரித்து விட்டார். தென்சென்னை மக்களவை தொகுதியில் போட்டியிடக்கூடிய முன்னாள் ஆளுநரும், பாஜகவின் முன்னாள் மாநிலத் தலைவருமான தமிழிசை சௌந்தரராஜன் “தேர்தல் நிதி பத்திர திட்டம் ஊழல் ஆகாது” என பேசியிருக்கிறார்.

மேலிருந்து கீழ்வரை ஒட்டு மொத்த பாஜகவின் நிலைபாடு இதுதான். உச்சநீதிமன்றமே தீர்ப்பளித்தாலும் பாஜகவினர் திருந்தமாட்டார்கள். பிரதமரில் துவங்கி தமிழிசை சௌந்தரராஜன் வரையில் ‘திருட னுக்கு தேள் கொட்டிய கதையாக’ உச்சநீதிமன்ற தீர்ப்பை ஏற்றுக் கொள்ளவும் முடியவில்லை; முற்றாக நிராகரிக்கவும் முடிய வில்லை. தீர்ப்பை ஏற்றுக் கொள்ளாததற்கு முக்கியமான காரணம் உள்ளது.

சட்டவிரோத பணப்பரிமாற்ற தடைச் சட்டத்தை (Prevention of Money Laundary Act) பயன்படுத்தி தில்லி மாநில முதலமைச்சர் கெஜ்ரிவால், ஜார்க்கண்ட் மாநில முத லமைச்சர் ஹேமந்த் சோரன் உள்ளிட்டு நாடு முழுவதும் பல எதிர்க்கட்சித் தலைவர்களை அமலாக்கத்துறை கைது செய்து சிறையில் அடைத்துள்ளது. தேர்தல் நிதி பத்திரங்கள் மூலம் அரசியல் கட்சிகளுக்கு முதலாளிகள், நிறுவனங்கள் செலுத்திய மொத்த பணம் ரூ.16,492 கோடி.

இதில்ரூ.8252 கோடி பாஜக கட்சிக்கு சென்றுள்ளது. இந்த நிதியை பெறுவதற்கு மத்திய ஆளுங்கட்சியான பாஜக பல வகையான தில்லு-முல்லுகளை செய்தது.

1 தங்களுடைய கட்டுப்பாட்டில் உள்ள அமலாக்கத்துறை, மத்திய புலனாய்வுத்துறை, வருமான வரித்துறை ஆகிய வற்றின் அதிகாரிகளை ஏவிவிட்டு முதலாளிகளின் கம்பெனிகளின் வீடுகளில், அலுவலகங்களில் சோதனை செய்வார்கள். சோதனைக்கு உள்ளானவர்கள் வேறு வழியின்றி அடுத்த சில வாரங்களில் பாஜகவுக்கு நிதி பத்திரங்கள் மூலம் பெரும் தொகையை செலுத்துவார்கள்.

உதாரணம் :- நவயுகாஎன்ஜினியரிங் கம்பெனி - உத்தரகண்ட் மாநிலத்தில் டன்னல் சுரங்கப்பாதை அமைக்கும் திட்டத்தில் பாதுகாப்பு ஏற்பாடு இல்லாமல் 41 பேர் சிக்கினர். எலி வளை சுரங்க முறைகுழுவினர் தலையிட்டு காப்பாற்றினார்கள். 2018ல் இந்த நிறு வனத்தின் மீது வருமான வரித்துறை சோதனை நடத்தியது. அடுத்த 6 மாதங்களில் ரூபாய் 30 கோடி பாஜகவுக்கு நிதி அளித்துள்ளது. ஏராளமான உதாரணங்கள் உள்ளன. ஏடு இடம் தராது.

2 கம்பெனிகளுக்கு / கான்ட்ராக்டர்களுக்கு சலுகை மற்றும் அரசு திட்டங்களை ஒன்றிய அரசு ஒதுக்கீடு செய்யும். சலுகைகளையும் திட்டங்களையும்பெற்றதற்குகைமாறாக பெரும்தொகையை பத்திரங்கள் மூலமாக பாஜகவிற்கு செலுத்துவார்கள்.

உதாரணம் - 38 கான்ட்ராக்ட் கம்பெனிகளுக்கு ரூபாய் 3.8 லட்சம் மதிப்புள்ள 179 அரசு கான்ட்ராக்ட்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த கான்ட்ராக்ட் கம்பெனிகள் பாஜகவுக்கு பத்திரங்கள் மூலம் நிதிசெலுத்தியுள்ளது. இந்தமோசடி இரண்டுவகையில்நடந்துள்ளது. கான்ட்ராக்டை பெற்றபிறகு நிதி வழங்கியது. நிதி வழங்கி விட்டு கான்ட்ராக்ட்டை பெறுவது. (போஸ்ட்பெய்ட், ப்ரீபெய்ட்).

3 கம்பெனிகள் குறிப்பாக மருந்து உற்பத்தி செய்யும் கம்பெனிகள் மீது தரமற்ற மருந்து என்ற புகார் வருகிறபோது சம்பந்தப்பட்ட கம்பெனிகளை அமலாக்கத்துறை அல்லது சிபிஐயை பயன்படுத்தி சோதனை செய்வார்கள். மருந்து கம்பெனிகள் வழக்கை சந்திக்க வேண்டியிருக்கும் என்று கருதிபத்திரங்கள் மூலமாக பாஜகவுக்கு நிதிசெலுத்திதப்பிப்பார்கள்.

உதாரணங்கள் - மருந்து உற்பத்தியில் தரம் பற்றிய புகார்களுக்கு உள்ளான 35 கம்பெனிகள் மூலம் (சோதனைக்கு உள்ளான பிறகு) பாஜகவிற்கு ரூபாய் 394 கோடி தேர்தல் பத்திரங்கள் மூலம் நிதி அளித்துள்ளன.

4நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களும் வரம்பின்றி தேர்தல் பத்திரங்கள் மூலம் நிதி அளிப்பதற்கான வாய்ப்பை பயன்படுத்தி (நட்டத்தில் இயங்கும் கம்பெனியாக இருந்தாலும் வரம்பின்றி தேர்தல் பத்திரம் மூலம் நிதி செலுத்திட கம்பெனி சட்டம் திருத்தப் பட்டது) பலமுதலாளிகள் / கான்ட்ராக்டர்கள் போலி கம்பெனிகள் மூலம் (Shell company - இத்தகைய போலி கம்பெனி களில் எந்த உற்பத்தியும், வியாபாரமும் இருக்காது) பத்திரங்கள் வாங்கி பாஜகவிற்கு நிதி செலுத்தியுள்ளனர்.

உதாரணங்கள் - வெறும்ரூபாய்1 லட்சம் முதலீடு கொண்ட நிறுவனமான சஃபல்கோயல் ரியால்ட்டி நிறுவனம், பாஜகவுக்கு ரூபாய் 35 கோடியை தேர்தல் பத்திரங்களாக வழங்கியுள்ளது. அதைப்போலவே, ரூபாய் 1 லட்சம் மட்டும் முதலீடு செய்யப்பட்ட நிறுவனமான சந்தர் கமர்ஷியல் நிறுவனம் ரூபாய் 20 கோடி பாஜகவுக்கு தேர்தல் பத்திரங்களாக அளித்துள்ளது.

இதுபோன்ற பல போலி கம்பெனிகள் தேர்தல் நிதி பத்திரங்கள் மூலம் பாஜகவுக்கு நிதி அளித்துள்ளன.

5மேற்கண்ட நான்கு விதமான முறையில் மட்டுமல்லாமல், மேலும் பல வடிவங்களில் சட்டவிரோதமான முறை யில் கார்ப்பரேட் நிறுவனங்கள் பத்திரங்கள் வாங்கி மத்திய ஆளுங்கட்சிக்கு செலுத்தியுள்ளன.

உதாரணம்: பார்ட்டி தொலைபேசி தனியார் நிறுவனத்திற்கு செயற்கைகோள் அலைக்கற்றை மோடி அரசு வழங்கியது. ஏலத்தின் மூலம் அலைக்கற்றை வழங்க வேண்டுமென்ற பழைய சட்டத்தை திருத்தி திருத்தச் சட்டம் கொண்டு வந்து ஏலம் இல்லாமலேநேரடியாகபார்ட்டிநிறுவனத்திற்குஅலைக்கற்றைவழங்கப்பட்டது. சட்டத்திருத்தத்திற்குமுன்பும், சட்டம் திருத்தப்பட்ட பிறகும் பார்ட்டி கம்பெனி ரூபாய் 150 கோடி பாஜகவுக்கு பத்திரங்கள் மூலம் நிதிவழங்கியது. இதன் பெயர்தான் கைமாறு செய்வது.

**வெள்ளையான கருப்புப் பணம்**

மேற்கண்ட விதங்களில் மத்தியில் ஆளும் பாஜகவிற்கு பத்திரங்கள் மூலமாக செலுத்தப்பட்ட நிதி கருப்புப் பணங்கள்தான். இத்தகைய கருப்புப் பணம் தேர்தல் நிதி பத்திரமாக பாஜகவுக்கு செலுத்தி அதை வெள்ளை பணமாக்கியிருக்கிறார்கள். இத் தகையபணப்பரிமாற்றத்தில்ஈடுபட்ட - பத்திரத்தை வாங்கிய முதலாளிகளும், நிறுவனங்களும், பத்திரங்களை பெற்றுக் கொண்ட பாஜகவும் சட்டவிரோத பணப்பரிமாற்ற தடைச் சட்டத்தின் கீழ் கிரிமினல் குற்றத்தை செய்தவர்கள் ஆவார்கள்.

2002 ஆம் ஆண்டு ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசால் இயற்றப்பட்ட சட்டத்தில் பாஜக ஆட்சிக்கு வந்த பிறகு கொண்டு வரப்பட்ட பல திருத்தங்களின் அடிப்படையில் அமலாக்கத்துறை, மத்திய புலனாய்வுத்துறை, வருமான வரித்துறை கருப்புப் பணத்தை நிதியாக கொடுத்தவர்கள் மீதும், கருப்பை வெள்ளை யாக்க நிதியை பெற்றுக் கொண்டவர்கள் மீதும் சட்டவிரோத பணப் பரிமாற்ற தடைச் சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கலாம்.

இத்தகைய நடவடிக்கை எடுப்பதற்கு ஆதாரங்களை தேடி நாட்கணக்கில், மாதக் கணக்கில் சம்பந்தப்பட்டவர்களை நீதிமன்ற காவலில் வைத்து விசாரிக்க வேண்டிய அவசியம் இல்லை. பாரத ஸ்டேட் வங்கி அளித்திருக்கக்கூடிய விபரங்களை வைத்து நேரிடையாக சம்பந்தப்பட்டவர்களை கைது செய்து சிறை யில் அடைத்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யலாம். இப்பிரச்சனையில் பாஜக தலைவர் நட்டா மட்டுமல்ல, தேர்தல் நிதி பத்திரம்சம்பந்தப்பட்டமசோதாவைநாடாளுமன்றத்தில்நிறைவேற்றுவதற்குமுக்கியகாரணமானபிரதமர்மோடிஉள்ளிட்டு அனைவர் மீதும் நடவடிக்கை எடுப்பதற்கு சட்டத்தில் வழி உண்டு.

இத்தகைய ஆபத்து உள்ளது என்பதை புரிந்து கொண்டதால் தான் எப்படியாவது உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு சம்பந்தப்பட்ட விபரங்களை மூடி மறைத்திட மோடி அரசு முயற்சி எடுத்தது. வங்கி நிர்வாகத்தின் மூலம் ஜூன் மாதம் 30 வரையில் விபரங்களை அளிக்க முடியாது என நீதிமன்றத்திற்கு மனு போடச் செய்தனர். உச்சநீதிமன்றத்தினுடைய உத்தரவிற்கு பிறகும் பாரத ஸ்டேட் வங்கி நிர்வாகம் முழு விபரத்தை ஒப்படைக்கவில்லை.

மீண்டும் உச்சநீதிமன்றம் கடுமையாக வலியுறுத்திய பிறகுதான் முழு விபரம் வெளிச்சத்திற்கு வந்தது. இன்னமும் கூட நிதி கொடுத்தவர்கள், நிதியை பெற்றவர்கள் என்ற விபரங்கள் முழுமையாக வெளிச்சத்திற்கு வரவில்லை.

**திருத்தப்பட்ட சட்டங்கள்**

இதையெல்லாம் நன்கு அறிந்த பாஜக தலைமை, தேர்தல் நிதி பத்திரத் திட்டத்தை உருவாக்குவதற்கு 1. கம்பெனி சட்டம், 2. வருமான வரி சட்டம், 3. தேர்தல் பிரதிநிதித்துவ சட்டம், 4. இந்திய ரிசர்வ் வங்கி சட்டம், 5. வெளிநாட்டு நிதி பராமரிப்பு சட்டம் ஆகிய ஐந்து சட்டங்களை திருத்தினார்கள். அன்றைய இந்திய ரிசர்வ் வங்கி ஆளுநரும், மத்திய தேர்தல் ஆணையரும் இந்த இரண்டு சட்டங்களையும் திருத்தக்கூடாது என்று மோடி அரசுக்கு எழுத்து மூலம் ஆட்சேபணை தெரிவித்திருந்தனர். அவர்களுடைய ஆட்சேபணைகளை நிராகரித்து அந்த சட்டங்கள் திருத்தப்பட்டன. இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் அந்நியர் ஆட்சியின்போது 1934 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

பாஜகவின் அன்றாட வேலை

தேர்தல் நிதி பத்திர திட்டத்தை உருவாக்கியது மட்டுமல்ல நாடு முழுவதும் பத்திரங்கள் மூலம் பாஜகவுக்கு நிதி அளிக்காத, குறைவாக நிதி அளித்த, பல புகார்களில் சிக்கியுள்ள முதலாளிகளை, கம்பெனிகளை மிரட்டுவதற்கு அமலாக்கத் துறை, மத்திய புலனாய்வுத்துறை, வருமான வரித்துறை ஆகிய வற்றை ஏவிவிட்டார்கள். யார் நிதி கொடுத்தார்கள், யார் கொடுக்க வில்லை என்பதை கண்டறிந்து மிரட்டுவதற்கு பெரிய வலைப் பின்னல் போன்ற திட்டத்தை உருவாக்கி செய்திருக்கிறார்கள். மேலும், ஒன்றிய அரசின் பல திட்டங்களை கான்ட்ராக்ட் கொடுப்ப தன் மூலமும் முதலாளிகளுக்கு சலுகை அளிப்பதன் மூலமும் தேர்தல் நிதி பாஜக பெற்றிருக்கிறது. இந்த தில்லு -முல்லு வேலைகளையே பாஜகவினர் அன்றாட வேலையாக செய்திருக்கின்றனர். இதற்கான ஏற்பாட்டையும்நுட்பமாக பாஜக தலைமை செய்திருக்கிறது. இதனால்தான் தேர்தல் நிதிபத்திர ஊழல் உலக மகா ஊழல் என்று வல்லுநர்கள் வர்ணித்துள்ளனர்.

சுதந்திர இந்தியாவில் இதுவரையில் கண்டிராத பாஜகவின் மகா ஊழலை வெளிச்சத்திற்கு கொண்டுவர, சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்திட உச்சநீதிமன்றத்தின் மேற்பார்வையில் சிறப்பு புலனாய்வு அமைப்பை ஏற்படுத்தி விசாரிக்க வேண்டுமென இந்தியா கூட்டணி கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

“மோடியின் 10 ஆண்டு கால ஆட்சியில் விவசாயிகளுக்கு ஒரு ரூபாய் கூட தள்ளுபடி செய்யவில்லை. மாணவர்கள் வாங்கிய கல்விக் கடன்கள் தள்ளுபடி செய்யவில்லை. சிறு, குறு நிறுவனங்களின் உரிமையாளர்கள் பெற்ற கடன்களை தள்ளுபடி செய்ய வில்லை. பட்டாசு ஆலை உரி மையாளர்கள் பெற்ற வங்கிக் கடன்கள் தள்ளுபடியாக வில்லை. ஆனால், அம்பானி, அதானி உள்ளிட்ட பெரும் கார்ப்பரேட் நிறுவனங்கள் வங்கிகளில் வாங்கிய ரூ.15 லட்சம் கோடி கடன்களை பிரத மர் மோடி தள்ளுபடி செய்துள் ளார்.

அந்த பெரும் நிதியை வைத்து ஏராளமான திட்டங்க ளை செய்திருக்கலாம். இந்தி யாவில் உள்ள அனைவருக் கும் கான்கிரீட் வீடுகளை கட்டி தந்திருக்கலாம். தரிசாக கிடக்கும் அனைத்து நிலங்க ளையும் முப்போகம் விளை யும் நிலங்களாக மாற்றியி ருக்க முடியும். ஆனால், பாஜசு அரசு, இந்தியாவின் சொத்துகளான விமான நிலையங்கள், விமா னங்கள், ரயில்கள், ரயில் தண்டவாளங்கள், ரயில்வே நிலங்கள் என அனைத்தை யும் விற்கத் துடிக்கிறது. கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வக்காலத்து வாங்கும் ஆட்சி யாக பாஜக ஆட்சி உள்ளது.

(நன்றி தீக்கதிர்)

கட்டுரை

# பொய், புரட்டு, புள்ளிவிபரம்!

- எம்.சதீஷ்

2014 மக்களவை தேர்தல் பிரச்சாரத்தில், தான் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டால் ஒவ்வொரு ஆண்டும் 2 கோடி வேலைகள் வழங்கப்படும் என்று மோடி வாக்குறுதி அளித்தார். தனது வாக்குறுதிக்கு ஆதாரமாக ஏப்ரல் 27, 2019 அன்று பிரதமர் மோடி தொலைக்காட்சியில்,"ஒவ்வொரு ஆண்டும் கிட்டத்தட்ட 2.5 கோடி வேலைகள் சேர்க்கப்படுவதாக பணியாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு (EPFO) புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன" என்றும் கூறினார். ஆனால் உண்மை என்ன?

கடந்த 2016-17 காலகட்டத்தில் நாட்டில் விவசாயம், சேவைத்துறை, கிராமப்புறம் அல்லது நகர்ப்புறங்கள் என அனைத்து வகையான வேலைகளிலும் சுமார் 41.27 கோடி பேர் பணியாற்றினர். ஆனால் அடுத்த 5 ஆண்டுகளில் அதாவது 2022-23இல் இந்த எண்ணிக்கை 40.57 கோடியாகக் குறைந்தது. அதாவது கிட்டத்தட்ட 70 லட்சத்துக்கும் அதிகமான அளவில் வேலையிழப்பு ஏற்பட்டது.

2022-23இல் வேலையின்மை 7.6 சதவீதமாக உள்ளது. அதாவது சுமார் 3 கோடி பேர் வேலையில்லாமல் உள்ளனர். இதில் மிக முக்கியமான விஷயம் என்னவென்றால் கொரோனா காலகட்டத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் 25 சதவீதத்திற்கு மேல் அதிகரித்ததை வேலையின்மை தரவில் சேர்க்கவில்லை. இந்தத் தோல்வியை மூடிமறைக்க, மோடியும் அவரது அமைச்சர்களும் அடிக்கடி தவறான புள்ளிவிவரங்களையும் அறிக்கைகளையும் வெளியிட்டு வேலைகள் உருவாக்கப்பட்டுள்ளது போன்று காட்டுகின்றனர்.

2015-16 மற்றும் 2022-23க்கு இடைப்பட்ட காலத்தில் 4.1 கோடி நபர்களுக்கு முத்ரா யோஜனா கடன்கள் கொடுக்கப்பட்டிருப்பதையும் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டதாக பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. இதில் சோகமான விஷயம் என்றால் சராசரி கடன் தொகை ரூ.55,622 மட்டுமே. புதிய தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்த சிறு வணிக உரிமையாளருக்கு இந்தத் தொகை எவ்வாறு உதவும் என்பது கற்பனைக்கு அப்பாற்பட்டது.

மோடி தனது கொள்கைகள் மக்களை விவசாயத்திலிருந்து பாதுகாப்பான, உற்பத்தி அல்லது சேவையில் சிறந்த ஊதியம் பெறும் வேலைகளுக்கு மாற்றும் என்றும் உறுதியளித்தார். மேலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், பொருள் உற்பத்தியின் பங்களிப்பு 17 சதவீதத்தில் இருந்து 25 சதவீதமாக உயரும் என்று அவர் உறுதியளித்தார். ஆனால் உண்மையான நிலவரம் என்னவென்றால் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பொருள் உற்பத்தியின் பங்களிப்பு 2020க்குள் வெறும் 13 சதவீதமாக சுருங்கியது. மிகவும் சிரமத்துடன் மெதுவாக தற்போதுதான் 17 சதவீதத்தையே அடைந்துள்ளது.

வேலையின்மை நெருக்கடியால் மக்கள் மீண்டும் கிராமங்களுக்குச் சென்று அதிக வேலைப்பளுவுடன் உள்ள வேலைகள் மற்றும் வீழ்ச்சியடைந்து வரும் விவசாயத் துறையிலிருந்து தங்களால் இயன்றதைச் சிறிது சம்பாதிக்க முயற்சிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இந்தியாவின் தொழிலாளர்களில் 46 சதவீதம் பேர் விவசாயம் அல்லது அது தொடர்பான நடவடிக்கைகளில் பணிபுரிகின்றனர். விவசாயத் தொழிலாளர்கள் சொற்பக் கூலியில் வேலை செய்கிறார்கள், அதுவும் பருவகாலங்களில் மட்டுமே. இவை அனைத்தும் வேலைவாய்ப்பு எண்ணிக்கையாக கணக்கிடப்படுகின்றன. இருப்பினும் இது உண்மையில் மறைக்கப்பட்ட வேலையின்மை.

2014-15 ஆம் ஆண்டில், சுமார் 5.8 கோடி பேர் ஊரக வேலை உறுதித் திட்டத்தில் (MGNREGS) பணிபுரிந்துள்ளனர். இந்த எண்ணிக்கை 2022-23இல் 8.8 கோடியாக உயர்ந்தது. 100 நாள் வேலை என்று கூறப்பட்டாலும், ஊரக வேலை உறுதித் திட்டத்தில் ஒரு வருடத்தில் சராசரியாக 50 நாட்கள் மட்டுமே வேலை கொடுக்கப்படும்

நிலையில், இந்த வேலைக்கு சம்பளமாக ஒரு நாளைக்கு அதிகபட்சம் ரூ.237/- மட்டுமே கிடைக்கிறது.

கடினமான வேலைக்கு குறைந்த ஊதியம் பெறும் ஊரக வேலை உறுதித் திட்டத்தில் ஒரே ஆண்டில் 8.8 கோடி பேர் சார்ந்திருப்பது வேலை நெருக்கடியின் அளவிற்கு முக்கிய சான்றாகும். ஆனால் தற்போது இந்த உயிர்காக்கும் திட்டமும் நிதியின்றி தவிக்கிறது.

பெண்கள் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். கிராமப்புறங்களில் அவர்களின் வேலையின்மை விகிதம் ஆண்களை விட இரு மடங்காகவும் நகர்ப்புறங்களில் மூன்று மடங்காகவும் உள்ளது. சமீபத்தில், பெண்களின் வேலைப் பங்கேற்பு அதிகரித்துள்ளதாகக் கூறும் புள்ளிவிவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன, ஆனால் இவை தவறானவை. விலைவாசி உயர்வு, ஊதியம் குறைவு மற்றும் வேலைகள் கிடைக்காத நிலையில் தங்களுக்கும் தங்கள் குடும்பத்திற்கும் உணவளிப்பதற்காகப் பல வகையான வேலைகளைச் செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ள பெண்களால் 'சுய தொழில்' மற்றும் 'சம்பளமில்லாத'' வேலைகளும் அதிகரித்து வருகின்றன.

ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள போலீஸ் படைகள் முதல் பல்கலைக்கழகங்கள், மருத்துவமனைகள், நீதித்துறைகள், வங்கிகள் என கிட்டத்தட்ட 10 லட்சம் காலியிடங்கள் உள்ளன. இங்கு ஆட்சேர்ப்பு எதுவும் நடைபெறவில்லை.

மாநில அரசுப் பணிகளில் 1.04 லட்சம் காலியிடங்களுக்கான தேர்வில் வினாத்தாள் கசிந்த 41 நிகழ்வுகளில், சுமார் 1.4 கோடி இளம் விண்ணப்பதாரர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களில் பெரும்பாலோர் இன்னும் செயல்முறை முடிவடையும் வரை காத்திருப்பதாகவும் சமீபத்திய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பு அதிகரிக்க என்ன செய்ய வேண்டும்?

அரசு பொது முதலீட்டை அதிகரிக்க வேண்டும். அதற்கான ஆதரவை வழங்க வேண்டும். விவசாயிகளுக்கு குறைந்தப்பட்ச ஆதார விலை (MSP) உத்தரவாதம் அளிக்க வேண்டும். தொழில்துறை தொழிலாளர்களுக்கு பாதுகாப்பான வேலைகள் மற்றும் சிறந்த ஊதியங்கள் வழங்க வேண்டும். விவசாயத் தொழிலாளர்களுக்கு உத்திரவாதப்படுத்தப்பட்ட குறைந்தபட்ச ஊதியம் மற்றும் தேசிய ஊரக வேலை திட்டத்தின் வேலைநாட்கள் மற்றும் ஊதியங்கள் அதிகரிக்க வழிவகை மேற்கொள்ள வேண்டும்.

தொழில்துறையில் 65 சதவீத வேலைவாய்ப்பை வழங்குவதற்காக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் (MSME) துறையை ஆதரிக்க வேண்டும். முக்கியமாக நாட்டின் பொதுத்துறையை பாதுகாக்க வேண்டும். வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பெருநிறுவன ஏகபோகங்களின் பங்கைக் குறைக்க வேண்டும். தனியார்மயக் கொள்கையை அரசு கைவிட வேண்டும். தனியார் துறையால் மக்களின் பிரச்சனைகளுக்கு ஒருபோதும் தீர்வு வழங்க முடியாது என்பதை அரசு உணர வேண்டும்.

60,000 பணியிடங்களுக்கு 48 லட்சத்திற்கும் அதிகமான தேர்வாளர்கள் பிப்ரவரி மாத நடுப்பகுதியில் 60,000 காவலர்கள் பணியமர்த்தப்பட உள்ளதாக பாஜக ஆளும் உத்தரப்பிர தேச அரசாங்கம் அறிவித்தபோது, 48 லட்சத்திற்கும் அதிகமான இளைஞர்கள் மற்றும் பெண்கள் தேர்வு மையங்களில் குவிந்ததால், உத்தரப்பிரதேச மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும் மிக மோசமான நெரிசலுடன் ரயில்கள் மற்றும் பேருந்துகளில் பயணம் மேற்கொண்டும், ரயில் நடைமேடைகளில் உறங்கியும் ஒரு வழியாக எப்படியோ கடும் போராட்டத்துடன் தேர்வறைக்குச் சென்று, தேர்வு எழுதினர்.

இஸ்ரேல் போர் மண்டலத்தில்...

சமீபத்தில் வேலையில்லாதவர்களின் விரக்தியாலும், இந்திய அரசாங்கத்தின் அலட்சியத்தாலும் பிப்ரவரி மாத மத்தியில் இஸ்ரேலின் போர் மண்டலத்தில் பணி புரிவதற்காக 10,000 கட்டுமானத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியது. இஸ்ரேலின் போர்மண்டலதிற்கான ஆட்சேர்ப்பு பாஜக ஆளும் உத்தரப்பிரதேசத்தில் நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. ●

# IFHRMS மூலம் 2024-25 நிதியாண்டிலிருந்து வருமான வரி பிடித்தம் மேற்கொள்ளும் நடைமுறையில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை உடனடியாக களையக் கோரி அரசு முதன்மைச் செயலாளர் நிதித்துறை அவர்களுக்கு நமது சங்கத்தின் சார்பில் வழங்கப்பட்ட

# முறையீடு

தமிழ்நாடு அரசில் பணிபுரியும் ஊழியர்களுக்கு கடந்த 2020 முதல் சம்பள பட்டியல் மற்றும் இதரப் பட்டியல்கள் ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மை திட்டத்தின் (IFHRMS) மூலம் ஊதியம் அரசு ஊழியர்களின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டு வருகிறது.

தற்பொழுது இந்த மென்பொருள் சில மாற்றங்கள் செய்யப்பட்டு Kalanjiyam என்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் இந்த நிதி ஆண்டு 2024-2025 முதல் வருமான வரி பிடித்தமானது ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மை மென்பொருள் (IFHRMS) மூலமாக கணக்கிட்டு பிடித்தம் செய்யப்படுவதற்கான வழி காட்டுதல் ஆணையாளர், கருவூல கணக்குத்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த புதிய நடைமுறையில் ஊழியர்களின் விருப்பத்தின் அடிப்படையில் வருமானவரி பிடித்தம் பழைய நடைமுறை, புதிய நடைமுறை (Old Regime / New Regime) என தேர்வு செய்ய அறிவுறுத்தப்பட்டது. இதனை தேர்வு செய்யாத பணியாளர்களுக்கு (New Regime) புதிய நடைமுறை என்ற அடிப்படையில் வருமான வரி பிடித்தம் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது 2024 ஏப்ரல் மாதம் முதல் இந்த புதிய நடைமுறை ஊழியர்களுக்கு செயல்படுத்தும்போது பல்வேறு சிக்கல்களை சம்பளப் பட்டியல் தயார் செய்யும் ஊழியர்கள் எதிர்கொண்டு வருகிறார்கள் என்பதை தங்களின் கனிவான பார்வைக்கு கொண்டு வருகிறோம்.

1) ஊழியர்கள் தேர்வு செய்த விருப்பத்தின் அடிப்படையில் வருமானவரி பிடித்தம் செய்யாமல் அளவுக்கு அதிகமாக சில ஊழியர்களுக்கு அனைத்து பிடித்தங்களையும் கழித்துவிட்டு அவர்கள் வாங்கும் மாதாந்திர ஊதியத்தைவிட அதிகமாக வருமானவரி பிடித்தம் செய்யப்படுகிறது. இதுபோல் ஓய்வூதியம் பெறும் ஊழியர்களுக்கு அதிகமான தொகை பிடித்தம் செய்யப்படுகிறது.

2) வருமானவரி பழைய நடைமுறை(Old Regime) செயல்படுத்தும்போது அதில் வரிவிலக்கு பெற்ற பல்வேறு இனங்கள் (உ.த. வீட்டுக்கடன், வட்டி, தனி நபர் காப்பீடு, தொழில் வரி, கல்விக்கடன், மருத்துவக் காப்பீடு, அஞ்சல் காப்பீடு, மாற்று திறனாளிகளுக்கான விலக்கு) உள்ளிட்டவைகளைக்கூட பதிவேற்றம் செய்வதற்கான Incomtax declaration, Incometax deduction வசதிகள் களஞ்சியம் மென்பொருளில் தற்பொழுது விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த வசதியை தொடர்ந்து பயன்படுத்தும் வாய்ப்பை தேதி வரையறை இல்லாமல்

சம்பளம் எடுக்கும் வரை வழங்கினால் மட்டுமே ஊழியர்களுக்கு பாதிப்பு ஏற்படுவதை தவிர்க்க முடியும். இதுநாள் வரை வருமானவரி பிடித்தம் செய்யும் வரம்பிற்குள் வராத அடிப்படை பணியாளர்களுக்கு கூட வருமானவரி பிடித்தம் செய்யப்படுகிறது.

அதுபோல் ஊழியரகள் வீட்டுக் கடன் மற்றும் தனிப்பட்ட கடன்களை மாதாந்திர தவணையில் செலுத்தும் நிலையில் உள்ளனர். இந்த புதிய நடைமுறை IFHRMS இல் மேற்கண்டவற்றை எதையும் கருத்திற்கொள்ளாமல் எந்த அடிப்படையுமின்றி பிடித்தம் செய்யப்படுகிறது. அதனால் ஊழியரகள் மாதாந்திர தவணையினை கட்டுவதற்கு பல்வேறு சிரமங்களுக்கு ஆளாக நேரிடுகிறது.

அதேபோல் ஊழியர்களின் வழக்கமாக மாதாந்திர வருமான வரி பிடித்தத்திற்கு மிக அதிகமாக(IFHRMS) மூலம் வருமானவரி பிடித்தம் செய்யப்பட்டால் அதிகம் பிடித்த தொகை மீளப் பெறுவதற்கு ஆண்டு கணக்கில் ஆகிறது. அதுமட்டுமல்ல ஊழியர்கள் கடுமையான நிதி நெருக்கடிக்கு தள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்ட வருமானவரி பிடித்தம் செய்வது பணம் பெறும் அலுவலர்களின் முதன்மையான கடமை. அவ்வாறு வருமானவரி பிடித்தம் செய்யாமல் இருந்தால் தனியர் அபராதம் கட்ட வேண்டிய சூழ்நிலை உள்ளது. இருந்தபோதிலும் வருமானவரி பிடித்தம் செய்வதற்கான மாற்றங்கள் செய்வதை தற்பொழுது பணம் பெறும் அலுவலர்களோ அல்லது சம்பந்தப்பட்ட ஊழியர்களோ செய்ய இயலவில்லை. முழுக்க முழுக்க விப்ரோ என்ற தனியார் நிறுவனத்தின் கட்டுப்பாட்டிலேயே இயங்கி கொண்டு இருக்கிறது. அதைத்தொடர்ந்து வருமானவரி எவ்வாறு பிடித்தம் செய்யப்பட வேண்டும் என்ற கணக்கீடு இல்லை. இப்படி பல்வேறு சிரமங்களை இந்த வருமானவரி பிடித்தத்தில் ஏப்ரல் 2024 மாதத்தில் உள்ளதால் முற்றிலுமாக இந்த வரி பிடித்தம் மாற்றம் செய்கின்ற பணியை பணம் பெறும் அலுவலர்களிடமே ஒப்படைப்பது என்பது சிறப்பானதாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

எனவே, உடனடியாக ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை (IFHRMS) மூலமாக வருமானவரி பிடித்தத்தினை மேற்கொள்வதில் பல்வேறு சிரமங்கள் மற்றும் குழப்பங்களை களைவதற்கான உரிய நடவடிக்கை மேற்கொண்டு (Old Regime) பழைய நடைமுறையில் வீட்டுக் கடன் அசல் வட்டி, கல்விக்கடன் வட்டி, மாற்றுதிறனாளிகளுக்கான கழிவு, காப்பீடு, மருத்துவக்காப்பீடு, கல்விக்கட்டணம் முதலானவையை வருமானவரியில் கழித்துக்கொள்ளக்கூடிய வகையில் அதன் விபரங்களை மே 2024 மாத ஊதியப் பட்டியலுக்கு முன்னரே பதிவேற்றம் செய்ய ஏதுவாக IFHRMSஇல் அதற்கான மாற்றங்களை செய்த பின்னரே உரிய கணக்கீடுகளை மேற்கொண்டு குறைகளை சரி செய்திடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் சென்ற ஆண்டில் பிடித்தம் செய்த வருமானவரியினை மட்டுமே பிடித்தம் செய்து ஏப்ரல் மாதம் ஊதியத்தினை ஊழியர்கள் உரிய நேரத்தில் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரசு முதன்மைச் செயலாளர் அவர்களை கனிவுடன் கேட்டுக்கொள்கிறோம். ●

கட்டுரை

# கம்யூனிச சிந்தனை வளர்ச்சியைக் கண்டு அஞ்சி நடுங்கும் பிரதமர்

**- அ.அன்வர் உசேன்**

ஐரோப்பாவில் கம்யூனிசம் எனும் 'பூதம்' முதலாளித்துவத்தை துரத்திக் கொண்டுள்ளது என 1848ஆம் ஆண்டு காரல் மார்க்சும் ஏங்கெல்சும் தமது கூட்டு முயற்சியில் உருவாக்கிய புகழ்மிக்க சாகா வரம் பெற்ற கம்யூனிஸ்ட் அறிக்கையில் குறிப்பிட்டனர். இப்பொழுதும் கம்யூனிசம், உலகம் முழுவதும் முதலாளித்துவத்தை துரத்திக் கொண்டுதான் உள்ளது. முதலாளித்துவத்தின் மிக மோசமான வடிவமான கூட்டுக் கொள்ளை முதலாளித்துவத்தையும் பாசிசத்தையும் அமலாக்க முனையும் பிரதமரையும் கம்யூனிசம் துரத்துகிறது. தனது அச்சத்தை வெளிக்காட்டாமல் இருக்க கம்யூனிசத்தை மக்களின் எதிரியாக இந்திய வாக்காளர்களிடம் காட்ட பிரதமர் முனைந்துள்ளார்.

**கம்யூனிசச் சிந்தனையை நிந்தனை செய்யும் பிரதமர்**

உத்தரப்பிரதேசம் அலிகாரில் நடைபெற்ற தேர்தல் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் மோடி, காங்கிரஸ் தேர்தல் அறிக்கை குறித்து மக்கள் ஜாக்கிர தையாக இருக்க வேண்டும் எனவும் சொத்து மறுவிநியோகம் என்ற பெயரில் மக்களை கொள்ளையடிக்க காங்கிரஸ் முயல்கிறது எனவும் பேசியுள்ளார். "உங்களிடம் இரண்டு வீடுகள் இருந்தால் காங்கிரஸ் ஒரு வீட்டை பிடுங்கிக்கொள்ளும்" என பேசிய பிரதமர் "இது மாவோயிஸ்ட் சிந்தனை" எனவும் "கம்யூனிஸ்ட் சிந்தனை" எனவும் திருவாய் மலர்ந்துள்ளார். மேலும் இந்த கம்யூனிஸ்ட் சிந்தனையை அமலாக்கி கம்யூனிஸ்டுகள் பல தேசங்களை அழித்துள்ளனர் எனவும், அதனைத்தான் இந்தியா கூட்டணி இந்தியாவில் செய்ய முனைகிறது எனவும் பேசியுள்ளார். தனது ஒவ்வொரு உரையிலும் பிரதமர் பல்வேறு பொய்களை முன்வைக்கிறார். காங்கிரஸ் தனது தேர்தல் அறிக்கையில் எங்கும் சொத்துக்கள் மறுவிநியோகம் குறித்து பேசவில்லை. எனவே மற்றவர்களின் சொத்துக்களைப் பறிக்கும் எந்த கேள்வியும் எழவில்லை. மக்கள் தொகை கணக்கெடுப்பின் பொழுது சமூக- பொருளாதார-சாதிவாரி கணக்கெடுப்பும் நடத்தப்படும் என்றுதான் காங்கிரஸ் அறிக்கை குறிப்பிடுகிறது. இதனை காங்கிரஸ் மட்டுமல்ல; இடது சாரிகள் உட்பட பெரும்பாலான கட்சிகள் தமது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளன. பாஜகவுடன் கூட்டணி வைத்துள்ள பாமக கூட இந்த கோரிக்கையை தனது தேர்தல் அறிக்கையில் முன்வைத்துள்ளது.

இந்த கோரிக்கைக்கு எதிராக உள்ள கட்சி பாஜக தான்! சாதிவாரி கணக்கெடுப்பு நடந்தால் மக்களின் பொருளாதார நிலை குறித்தும் விவரங்கள் சேகரிக்கப்படும். இதனைத்தான் பிரதமர் திரித்து பிரச்சாரம் செய்கிறார். இப்படி விவரங்கள் சேகரிக்கப்படுவது மக்களின் சொத்துக்களை அபகரிக்க என வாய் கூசாமல் சொல்கிறார். பொருளாதார நிலை உட்பட சாதிவாரி கணக்கெடுப்பை பாஜக எதிர்ப்பது என்பதே அதானி/ அம்பானி போன்ற தனது நண்பர்களை பாதுகாக்கவும் உயர்சாதியினர் கல்வியிலும் வேலைவாய்ப்புகளிலும் அனுபவிக்கும் அபரிமித சலுகைகள் குறித்து வெளிவராமல் பாதுகாக்கவும்தான்! கூட்டுக் கொள்ளை முதலாளிகளைப் பாதுகாக்கும் நிகழ்ச்சி

நிரலோடு, உயர்சாதியினரின் 'நலன்களை' பாதுகாப்பது என்பது ஆர்.எஸ்.எஸ்- பாஜக நிகழ்ச்சி நிரல். இடஒதுக்கீடுக்கு ஆர்.எஸ்.எஸ் எதிராக உள்ளது என்பது அனைவரும் அறிந்த உண்மைதானே!

**சூறையாடலுக்கு வழிவகுத்த கொள்கைகள்**

பொருளாதாரக் கொள்கைகள் குறித்த காங்கிரஸ் தேர்தல் அறிக்கையை பிரதமர் படிக்கவில்லை அல்லது திட்டமிட்டு திசைதிருப்ப எத்தனிக்கிறார். காங்கிரசின் தேர்தல் அறிக்கை சொல்கிறது: "1991ஆம் ஆண்டு காங்கிரஸ் தாராளமய சகாப்தத்தில் நுழைந்தது. தேசத்தை பகிரங்க, சுதந்திரமான, போட்டியுடன் கட்டுப்பாடுகள் கொண்ட பொருளாதாரம் எனும் கட்டமைப்பை நோக்கி தேசத்தை வழிநடத்தியது". காங்கிரசின் இந்த தாராளமயம் எனும் பொருளா தார கொள்கை எங்களுடையது எனவும் காங்கிரஸ் அதனை கடத்திகொண்டது எனவும் அன்று பாஜக கூறியது. வாஜ்பாய் காலத்திலும் பின்னர் பிரதமரின் காலத்திலும் இந்த கொள்கைகளைதானே பாஜக எல்லையின்றி கடைப்பிடித்தது. காங்கிரஸ் உருவாக்கியிருந்த சில கட்டுப்பாடுகளையும் அகற்றிய காரணத்தால்தான் இன்று இந்தியப் பொருளாதாரம் பல சிக்கல் களை சந்திக்கிறது. பிரிட்டஷ் காலத்தில் கூட இல்லாத அளவுக்கு இன்று பொருளாதார அசமத்துவம் உருவாகியுள்ளது என்பதை பா.ஜ.க. மறுக்க முடியுமா? இதனை முற்றிலும் மறைத்து பிரதமர் பொய்களை தனது உரையில் முன்வைக்கிறார். காங்கிரசின் தேர்தல் அறிக்கை மேலும் சொல்கிறது: "ஏகபோகங்களுக்கும் பெரும் செல்வந்தர்கள் உருவாவதற்கும் கூட்டுக் கொள்ளை முதலாளித்துவத்துக்கும் நாங்கள் எதிரானவர்கள்"

பிரதமர் மோடி ஆட்சியில் கூட்டுக் கொள்ளை முதலாளித்துவம் (கூட்டுக் களவாணி முதலாளித்துவம்- Crony Capitalism) உருவாகியுள்ளது என்பதும் அது அகற்றப்பட வேண்டும் என்பதும் பல கட்சிகளும் தமது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளன. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தேர்தல் அறிக்கை கீழ்கண்டவாறு குறிப்பிடுகிறது: "கூட்டுக் கொள்ளை முதலாளித்துவம் மற்றும் மத வாத – கார்ப்பரேட் மக்கள் விரோத கூட்டை உருவாக்கும் கொள்கைகள் திரும்பப் பெறப்பட வேண்டும்." பாஜகவின் பொருளாதாரக் கொள்கைகளை எதிர்க்கும் எந்த ஒரு அரசியல் இயக்கமும் கூட்டுக் கொள்ளை முதலாளித்துவம் என்பதை எதிர்த்தே ஆக வேண்டும். அதே சமயம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இதனை வெறும் கூட்டுக் கொள்ளை முதலாளித்துவம் என்று மட்டும் மதிப்பிடாமல், கார்ப்பரேட்டுகளுக்கும் மதவாதத்துக்கும் உள்ள மக்கள் விரோத கூட்டுத் தொடர்பையும் அம்பலப்படுத்துகிறது. ஆனால் பாஜகவின் தேர்தல் அறிக்கையோ அல்லது பிரதமரின் உரைகளோ இது குறித்து ஒரு வார்த்தை பேசுவது இல்லை. இந்தியா அணியில் உள்ள கட்சிகள் முன்வைக்கும் கூட்டுக் கொள்ளை முதலாளித்துவத்துக்கு எதிரான நிலைபாடுதான் பிரதமர் மோடியை பதற்றமடையச் செய்துள்ளது. தனது உற்ற நண்பர்களை பாது காக்க "கம்யூனிசம்" என்பதை பூச்சாண்டியாக முன்னிறுத்தி பயமுறுத்த பிரதமர் முனைகிறார்.

**மறுவிநியோகம் கம்யூனிஸ்ட் சிந்தனைதான்!**

சொத்துக்களை மறுவிநியோகம் செய்வது "மாவோயிஸ்ட் சிந்தனை" எனவும் "கம்யூனிசச் சிந்தனை" எனவும் பிரதமர் இகழ்கிறார். திருவாளர் மோடி அவர்களே! ஆம்! முதலாளித்துவ சமூகத்தில் உழைப்பாளிகள் உருவாக்கி முதலாளிகள் பறித்துக்கொண்டுள்ள சொத்துக்களை மறுவிநியோகம் செய்வது என்பது கம்யூனிசத்தின் மிக முக்கிய கொள்கைதான்! அதனை ஏற்றுக்கொள்வதிலோ அல்லது பகிரங்கமாக அறிவிப்பதிலோ கம்யூனிஸ்டுகளுக்கு எந்த தயக்கமும் இல்லை. ஆனால் நீங்கள் கொச்சைப்படுத்துவது போல இரண்டு வீடுகள் இருப்பவர்களிடமிருந்து ஒரு வீட்டை பறிப்பது அல்ல கம்யூனிசம்! நீங்கள் உருவாக்கியுள்ள கூட்டுக் கொள்ளை முதலாளிகளிடமிருந்து அதீத சொத்துக்கள்

பறிக்கப்படும் என்பது நிச்சயம். கம்யூனிசச் சிந்தனை பல நாடுகளை அழித்துவிட்டதாக பிரதமர் கூறுகிறார். சோசலிசத்தை இழந்த மக்கள்தான் தமது வாழ்வாதாரம் அழிந்துவிட்டது என இன்று வருந்திக் கொண்டுள்ளனர். சோசலிச சோவியத் யூனியன் இருந்திருந்தால் இன்று அமெரிக்கா வாலாட்டாது என ரஷ்ய மக்கள் எண்ணுகின்றனர். அந்த கம்யூனிசச் சிந்தனை படைத்த சோவியத் யூனியன் செய்த உதவிதான் இந்தியாவின் தொழில் வளர்ச்சிக்கும் பொருளாதார சுயசார்புக்கும் வித்திட்டது என்பதை பிரதமர் மறைக்கலாம்! ஆனால் அது உண்மை இல்லை என ஆகிவிடுமா? 1971 போரில் பாகிஸ்தானுக்கு ஆதரவாக 7வது கப்பற்படையை அமெரிக்கா அனுப்பிய பொழுது கம்யூனிசச் சிந்தனை படைத்த சோவியத் யூனியன்தான் இந்தியாவின் உதவிக்கு வந்தது என்பதை பிரதமர் மறுக்க இயலுமா? இன்றும் கூட அமெரிக்க மக்களிடையே குறிப்பாக இளம் வயதினரிடையே சோசலிச ஆதரவு கருத்துகள் அதிகரித்துள்ளன எனும் தகவலை பிரதமர் அறிந்துகொள்வது நல்லது.

**பின்தங்கிய விஸ்வகுருவும் முன்னேறிய கம்யூனிசச் சிந்தனையும்**

கம்யூனிசச் சிந்தனைகள், வழிகாட்டலில் இயங்குவ தால்தான் இன்று அமெரிக்காவுக்கு போட்டியாக சீனா பெரும் வளர்ச்சியைக் கண்டுள்ளது. சீனாவின் பொருளாதாரம் 20 டிரில்லியன் டாலர் நோக்கிச் செல்லும் பொழுது இந்தியா 3 டிரில்லியன் டாலரை தாண்டுவதற்கு முயன்று கொண்டுள்ளது. கம்யூனிச சிந்தனை படைத்த சீனா வறுமையை கிட்டத்தட்ட முற்றிலும் ஒழித்துவிட்ட பொழுது இந்தியாவில் ஐ.நா. கணக்குபடியே இன்னும் 10சதவீதம் மக்கள் அதாவது 14 கோடிப் பேர் மோசமான வறுமையில் உள்ளனர். இந்தியாவை ஒப்பிடும் பொழுது மிகவும் பின் தங்கியிருந்த வியட்நாம், இன்று தொழில் வளர்ச்சியில் இந்தியாவுக்கு சவாலாக முன்வந்துள்ளது. இந்தியா எதிர்பார்த்த பல தொழில் முதலீடுகள் கம்யூனிசச் சிந்தனை படைத்த வியட்நாம் பக்கம் சென்று கொண்டுள்ளன என்பதை மோடியும் பாஜகவும் மறுக்க முடியுமா? கோவிட் பெருந்தொற்று காலத்தில் தன் சொந்த மக்களுக்கு இலவச தடுப்பூசி தர மறுத்தது மோடி அரசு! அமெரிக்காவின் மிக கடுமையான தடைகள் உள்ள பொழுதும் 5 தடுப்பூசிகளை உருவாக்கி தனது மக்களை கம்யூனிசச் சிந்தனை படைத்த கியூபா காத்தது மட்டுமல்ல; தடுப்பூசி தொழில் நுட்பத்தை ஏழை அண்டை நாடுகளுக்கு இலவசமாக அளித்தது. அதுதான் கம்யூனிசச் சிந்தனை. ஐ.நா.வின் மனிதவள மேம்பாட்டு பட்டியலில் கம்யூனிசச் சிந்தனை படைத்த தேசங்களான சீனா 75ஆவது இடத்திலும், கியூபா 85ஆவது இடத்திலும் வியட்நாம் 107ஆவது இடத்திலும் இருக்கும் பொழுது ஏன் இந்தியா 134ஆவது இடத்தில் உள்ளது என்பதை விஸ்வகுரு விளக்குவாரா?

கம்யூனிசச் சிந்தனை என்னவென்பதை பிரதமர் அறிந்து கொள்ளவுமில்லை; புரிந்து கொள்ளவுமில்லை. கம்யூனிச எதிர்ப்பை மையமாக கொண்ட ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்தின் பரப்பிய பிரச்சாரகரான பிரதமருக்கு அது சாத்தியமும் இல்லை. எனவே தான் காங்கிரஸ் உட்பட இந்தியா அணி முன்வைக்கும் குறைந்தபட்ச மாற்றுத் திட்டங்களைக் கூட ஏற்க முடியாமல், கம்யூனிசம் ஆபத்தானது என்று பேசுகிறார். ஆனால் மக்கள், கம்யூனிசச் சிந்தனைகளை தமது பொருளாதார சமூக சுரண்டல் துன்பங்களிலிருந்து விடுவிக்கும் மாற்றா கவே பார்க்கின்றனர் என்பதே உண்மை! ●

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A. SELVAM . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com

# அமைப்பு தின நிகழ்வுகள்


சிவகங்கை


இராமநாதபுரம்


புதுக்கோட்டை


மதுரை


கோவை


திருவாரூர்


கன்னியாகுமரி


திண்டுக்கல்


திருப்பூர்


வடசென்னை

Registered Postal Registration No. TN/CH/(C)/200/2024-2026 WPP.No.TN/PMG(CCR)/
WPP-431/2024-2026 RNI No.68584/81 Posted at Egmore RMS-1 Pathirika Channel
Date of Publication 1st Week of Every Month - Posted on 10.05.2024



திருவண்ணாமலை



சேலம்



மயிலாடுதுறை


கள்ளக்குறிச்சி


விழுப்புரம்


நீலகிரி


ஈரோடு


தருமபுரி



Printed and Published by M.Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai-600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai-600002.
Editor: A.SELVAM. Phone: 28441286 E-mail: arasuoozhiyar@gmail.com